பாலவித்யா
தொகுதி 2 பகுதி 6
ஜூன் 1931

TL
7002:11,M30BV
M31:2.6.
188783

44 Regd. No. M. 2573.

பாலவித்யா சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு தபாற்கூலியுள்பட ரூபா. 1—8—0

ஸிங்கப்பூர், பினங், தென்னாப்பிரிக்கா, ஜாவா முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் ரூபா 2—0—0

ஜீவிய சந்தா உள்நாட்டிற்கு ரூ 15 வெளி நாட்டிற்கு ரூ 20.

ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

"பாலவித்யா" தனி சஞ்சிகை அணா மூன்று

சந்தாதாரர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

(1) சந்தாதாரர்கள் எந்தமாதத்தில் சந்தாதாரராய்ச் சேர்ந்தாலும் ஜனவரி மாதத்திலிருந்தே கணக்கு வைக்கப்பட்டு முன் மாதத்திய சஞ்சிகைகளையெல்லாம் அனுப்புவிக்கப்படும்.

(2) நமது பத்திரிகை பிரதி இங்கிலீஷ் கடைசி தேதியில் வெளிவரும். பத்திரிகை வெளியான பத்து தினங்களுக்குள், அது உங்களுக்கு வந்து சேராவிட்டால், உடனே எங்களுக்கு எழுதினால் நாங்கள் கவனிப்போம். அதற்கு மேற்பட்டால் சஞ்சிகையின் கிரயத்திற்காக மூன்று அணா தபால்பில்லை வாங்கி அனுப்பினால்தான் மறுபடியும் ஸஞ்சிகை அனுப்பப்படும்

(3) சந்தாதாரர்கள் தமது சந்தாத் தொகையை முன்னதாக மணியார்டர் பண்ணிவிட்டால் இருபாலர்க்கும் ஸௌகர்யம். வி பி. யில் அனுப்புவதாயிருந்தால் சந்தாதாரர்களுக்கு நாலு அணா அதிகமாக செலவாகிறது ஸிங்கப்பூர் பினங்கு முதலிய வெளிநாடுகளுக்கு வி. பி.யில் அனுப்பமுடியாது. அவர்கள் முன்பணம் மணியார்டர் செய்தாவது பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர்கள் வாங்கியனுப்பித்தாவது சந்தாதாரராகச் சேரவேண்டும்.

(4) சந்தாதாரர்கள் நமக்கு கடிதம் எழுதும்போது எப்பொழுதும் சந்தா நம்பரை எழுதவேண்டும். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டாவது தபால் பில்லையாவது வைத்து அனுப்பவேண்டும்.

(5) முக்கிய குறிப்பு:—நமது ஸஞ்சிகைக்கு சிறந்த கட்டுரைகளும் அரியவியாஸங்களும் மற்றும் உள்ள அரிய நீதி ஸாரங்களும் பிரசுரிப்பதற்கு ஏற்றுக்கொள்ளப்படும். அப்படி அனுப்பப்படுபவைகளை ஸஞ்சிகை பிரசுரிக்கும் தேதிக்கு போதுமான காலம் முந்தியே அனுப்பவேண்டும்.

விளம்பர விகிதம்.

ஒரு மாதத்திற்கு, முழுப்பக்கம் ரூ 20 அரைப் பக்கம் ரூ [illegible]

மற்றபடி நீண்டகால விளம்பரத்திற்கு எங்கள் ஆபீஸுக்கு எழுதவும்.

பாலவித்யா ஆபீஸ்,

[illegible] தெரு, [illegible] கும்பகோணம்.

188783
4-JUL 193

பாலவித்யா.

(மாதப் பத்திரிகை)

" உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

தொகுதி II	1931௵ ஜூன்௴ பிரஜோத்பத்தி௵ ஆனி௴	பகுதி VI

ஸ்ரீ

கடலூர்

தமிழாசிரியர் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியார் எழுதியது.

தமிழ் (தொடர்ச்சி).

வளர்ச்சி.

மிகமிகப் பண்டைக்காலத்துத் தமிழ்மொழியின் வளர்ச்சி எத்தகை முறை பற்றியிருந்ததென உய்த்துணர்தற்கொல்லாவிடினும் அரசர் தம் ஆதரவானும், புலவர்தம் பெருமுயற்சியானும் இஃது ஓங்கி வளர்ந்திருக்கவேண்டுமென்பது புலனாகாமற் போகாது. புலவர் பலர் ஒருங்குகுழுமி இம்மொழியிற் பன்னூல்களை யாத்துப் பிழை நுழையாவண்ணங் கண்காணித்து வருந்தியுழைத்திருக்கின்றனரென்பது தலையிடை கடைச்சங்கவுண்மையாற் றெளிதற் கூடும். கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து தமிழாய்ந்தாரென்பதா

லும், முற்றத்துறந்த முனிவர்களும் விழைவுடையராய், இம்மொழியினை முருகப்பிரான் முதலினரிடத்துங் கற்றுப் பாராட்டினரென்பதாலும், இம்மொழியின் இலக்கிய இலக்கண நிரும்பிப்புப் பணியில் அறிஞருலோர் அல்லும்எல்லும் ஈடுபட்டுழைத்தனரென்பது போதருகின்ற[illegible] பாண்டிய[illegible] தமிழ்மொழி வளர்ச்சிக்கென்றே தோன்றினரோவெனக் [illegible]ருமவண்ணம், அத்தகை ஆக்கவுதவியும் அறிவுழைப்பும் அளித்துள்ளனரென்பதுங் காணக்கிடப்பதே. நூல் வேந்தருங் கோல் வேந்தருமாகிய வில் விருதிறத்தினர் கையணைப்பு மிருந்தமையாற்றான் தொன்மதுரை, கபாடபுரமாதிய முதுநகருடைப் பெருநிலப்பரப்பு கடல் கோட்பட்டும் இம் முதுமொழி வளஞ்சுருங்கிடாது பெருக்கமே வாய்க்கப்பெற்றது. இயலிசை நாடகமென்னும் முப்பிரிவின்பாற் படுத்தப்பட்டு இம்மொழி வளர்ச்சி நாளுக்கு நாள் அல்காமற் பல்குமாறு ஓம்பப்பட்டுவந்தது. சங்கத்தினருதவியால் பலவகைத்துறைகளில் இம்மொழி வளம்பட்டதேயன்றிப் பின்னர் காவியக்கருத்தர்களாலும், சேர, சோழ வேந்தர்களாலும், பவுத்த சமணத்துறவிகளாலும், சமய குரவர்களாலும், புராண நூற்கர்த்தர்களாலும், மடாதிபதிகளாலும், ஒருசில பிற சமயவறிஞர்களாலும், அவ்வக்கால நிலைக்கும், அவ்வவர் அறிவு திருவாற்றல்களுக்கும் ஏற்பப் பல் நல்வழிகளிலும் இவ்வின்மொழி செப்பம் அடைந்துள்ளது. ஆடவர், மகளிர் ஆகிய இருபாலாருடைய ஆதரிப்பும் இம்மொழிக்குண்டு. பண்டை நூற்பாக்களிற் பல ஔவை, நச்செள்ளையார் முதலிய பெண் புலவர் வாய்ப்பட்டிருத்தல், பெண்டிரு மிம்மொழியாங் குழவியினைத் தம்மறிவாம் பாலூட்டிப் பேணினரென்பதை அறிவிக்கும். இவ்வண்ணம் நந்தாய்மொழியாந் தண்டமிழ் பலதிறமக்களின் அறிவூக்கமனைத்தையும் களைகணாக்கொண்டு வளர்ந்துள்ளாள். அவட்குச் செய்யுள்நூல்கள் என்னும் அணிகலனுக்குப் பஞ்சமே கொஞ்சமுமில்லை. சீரிய உரைநடை நூல்களாமாபரண வகையினையுமிழைத்துதவி அலங்காரப்படுத்தவேண்டுங் கடமை யொன்றே தமிழர் கொள்ளற்குரியதாயுள்ளது. இதனைப் பல நல்லவழிகளால் நிறைவேற்றவேண்டுவது நம் பொறுப்பாம்.

விழுப்பம்,

(தொடரும்.)

37. அங்கு மற்றுமவ் வேடனுற்றிட
அங்கவற்கெதி ரேகியே
பொங்கு சைவ விருத்தனாகிவெண்
பொடியொடாசி புரிந்திட
விங்கு வந்தமை யேதெனவிறை
யிங்கு குமரியி லாடெனத்
தங்கு நம்மக டுணையனுதெனத்
தங்கி நின்ற தயாபரா!

வேறு.

38. தன்மகட்குத் துணையாக்கித் தணிகை வேந்தன்
தன்னகத்துக் கேகியபின் றண்டை கொஞ்சும்
என் மனத்துக் கினியவனே! வள்ளிதன்னை
யின்புனல்காட் டென்றழைத்துச் சென்றருந்தி
யென்னகத்துக் காதலொழித் திடுவா யென்றே
யிரங்கிடவு மன்னவள்கேட் டோடாநிற்ப
முன்னகத்தே யானையதாய்த் தன்முன் றனை
முடுகிவா நினைந்திட்ட முருகவேளே!

39. ஆனையதைக் கண்டஞ்சி யணைத்துக் கொண்ட
அங்கயற்க ணம்மையினை யணைத்துப் பின்னர்
ஊனவுரு வொழித்தண்மை யுருவு காட்ட
வுளங்குழைந்த வள்ளியினைப் புனத்துப் போக்கி
ஏனனிலத் துற்றவவள் தோழி தன்னு
லெய்துவள்ளி யினைக்கூடி யின்புறுத்தி
ஆனவவள் தோழியொடு மவளை யில்ல
மனுப்பிட்ட வாறுமுகா! அருளார் கண்ணே!

வேறு.

40. ஏனலறுத்திட வெய்திய வேடுவ
ரெழின்மகளைத் தம தில்லிற் செறிப்ப
பானும றைந்திட லுற்றது மற்றதில்
பாவ மறுத் தருளும் பெருமான்

கானவர் தம்மையு மாளவு மெண்ணிடு
கருணையொ டம்மற வோர்க ளிலில்
மானவருங்கல வள்ளியை யுள்ளிய
மனதொடு நாடினை மஞ்ஞை பிரான் !

வேறு.

41. அள்ளியே யெடுக்கலாம் படித்தாய் நின்ற
வல்லிருளி லம்மறவ ரில்ல மெல்லாம்
வள்ளியே ! என்றுபல முறை யழைக்க
வந்தவொரு சேடியுடன் கூட்டி வந்து
கொள்ளுமென் றவள்கூறக் கொண்டு பாங்கர்
குலவியபூங் காவிலிருந் திரவு போக்க
வள்ளிதனைக் காணவரு வேடர்க் கஞ்ச
வள்ளிதனை யஞ்சலென்ற வாகைத் தோளாய் !

42. தண்ணருவி சொரிகிரியி னரசவேடன்
றன்மகனைக் காணுமே வாடித் தேடி
மண்ணதனி லுன்னடியா லுன்னைப் பாங்கர்
மன்னுபொழி லதில்மகளோ டமையக் கண்டும்
பண்ணமையப் பாடாமே பதை பதைத்துப்
படர்ந்த பெரும் படையோடும் பாய்ந்தெதிர்க்கத்
தண்ணருளை யவர்மாட்டும் பொழிய வெண்ணித்
தடிந்தவரை மாள்வித்த தடந்தோள் மன்னே !

43. தனைவளர்த்தோர்க் காவிரங்குந் தன்மையுள்ளாள்
தனைமகிழச் செயவெண்ணித் தடிந்தவேட
ரனைவரையு மருள்வழியா லெழுப்பி, வேண்டு
மவரிறையி னுடம்பாட்டா லன்பார் மன்றல்
தனையுமுடித் தவர்கள்தரு வரிசை பெற்றுத்
தன்மலையாங் கந்தவெற்பில் பொற்பில் கற்பில்
தனையனையா ரில்லாத யானை மானைத்
தன்னிடமும் வலமுங் கொண்டருளுந் தேவே!

(தொடரும்).

பால.—நாம் கவலைப்படுவதில் எள்ளளவும் பிரயோஜனமில்லை. வாசுதேவன் இன்றோ அல்லது நாளையோ கைது செய்யப்படுவானென்பது நிச்சயம். ராமலிங்கத்தின் சாக்ஷியைக் கேட்டதும், அவன் அப்பொழுதே கைது செய்யப்படுவானென்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் இன்ஸ்பெக்டர் சபேசய்யர், என்னுடைய வேண்டுகோளுக்கிணங்கி, அப்படிச் செய்யாமலிருந்திருக்கிறார்.

கோபால.—என்ன அநியாயம்! வாசுதேவனுடைய கம்பீரப் பேச்சையும் களங்கமற்ற முகத்தையும் கண்ட எவனாவது அவன் இதைச் செய்திருப்பானென்று நம்புவானா?

பால.—அவன் நிரபராதியென்று நீங்கள் நம்பலாம். நானும் நம்புகிறேன். ஆனால் அதை நாம் நிரூபிக்க வேண்டாமா? நியாயாதிபதியும் ஜூரர்களும் அவனுடைய கம்பீரத்தையும் களங்கமற்ற முகத்தையும் கண்டு திருப்தியடையமாட்டார்கள்.

கோபால.—வாஸ்தவம். சரி; இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும்?

பால.—அதுதான் எனக்கும் புரியவில்லை.

அச்சமயம வாசுதேவன் அவ்வறைக்குள் வந்தான். அவனுடைய முகம் வெளுத்திருந்தபோதிலும், அதில் பயமாவது குற்றமாவது சிறிதும் காணப்படவில்லை. அவனுடைய கண்களின் பார்வை 'எது வந்தபோதிலும் நான் தயார்' என்று தைரியத்துடன் கூறுவதுபோலிருந்தது. அவன், கோபால செட்டியாரைப் பார்த்து, அமைதியுடன்,

"என்னை இன்னும் போலிஸார் கைது செய்யாமலிருப்பது ஆச்சர்யமாயிருக்கிறது. ஆனால் அவர்கள் இந்த நிமிஷம் வந்தபோதிலும் நான் தயார்" என்று அவன் மேலே பேசுமுன், கோபால செட்டியார்,

"சரி; அதைப்பற்றி நாம் இப்பொழுது பேசவேண்டாம். மேலே செய்யவேண்டிய கார்யத்தைக் கவனிப்

போம். முதலில் நாம் நல்ல ஒரு வக்கீலைக் கண்டு இதைப் பற்றிப் பேசவேண்டும். அதுவுமன்றி, இன்னொரு காரியமும் செய்ய நிச்சயித்திருக்கிறேன். இவ்விஷயத்தில் போலீஸாரை அடியுடன் நம்ப எனக்கிஷ்டமில்லை. அவர்கள் இப்பேர்ப்பட்ட கொலைகள் நடக்கும்பொழுது, உன்னைப்போல் மாட்டிக்கொள்ளுபவர்களையே குற்றவாளிகளென்று ரூபித்து தண்டிக்க முயலுவார்கள். ஆகவே, வாஸ்தவத்தில் உன் தந்தையைக் கொலை செய்தவனைக் கண்டுபிடிப்பவர்களுக்கு நாம் பெருந்தொகை பரிசளிப்பதாக எல்லா பத்ரிகைகளிலும் விளம்பரம் செய்யவேண்டும். நாம் இப்படிச் செய்வோமாகில், சாமர்த்தியமுள்ள பல துப்பறிபவர்கள் ஆவலுடன் முன்வருவார்கள். ஏன்? உன் அபிப்பிராயமென்ன?" என்று வினவ, வாசுதேவன்,

"நான் தற்சமயம் இங்கு வந்ததற்குக் காரணம் இதைப்பற்றிப் பேசும்பொருட்டே. ஆனால் இதற்கு வேண்டிய ஏற்பாட்டை நீங்கள்தான் செய்யவேண்டும். ஏனென்றால், நான் கூடியசீக்கிரம் கைது செய்யப்படுவேனென்பது நிச்சயம்." என்றான். கோபால செட்டியார்,

"அதைப்பற்றி நீ கொஞ்சமும் கவலைப்படவேண்டாம். எனக்குள்ள ஆஸ்தி முழுமையும் இதில் செலவழிந்தாலும் பாதகமில்லை. ஆனால் நீ மட்டும் மிகவும் தைரியத்துடனிருக்கவேண்டும்." என்று சொல்ல, வாசுதேவன்,

"நான் கவலைப்படுவதிலும் பயப்படுவதிலும் பிரயோஜனமில்லை யென்பது எனக்குத் தெரியும். இன்னும் நிரபராதியாகிய என்னை தெய்வம் ரக்ஷிக்குமென்பது நிச்சயம். அதுவும் என்னைப் பெற்று வளர்த்த என் தந்தையையே கொன்ற குற்றத்திற்காக, நான் உயிரை இழக்க ஈசுவரன் சம்மதிக்கமாட்டார். ஆனாலும் என்னால் உங்களெல்லோருக்கும் நேரிட்ட கஷ்டத்தையும் அவமானத்தையும் நினைக்கும்பொழுது—" என்று மேலே பேசுமுன், செட்டியார், அவனைத் தடுத்து,

"அசடே! இதில் அவமானமென்ன? இக்கலியுகத்தில் இப்பேர்ப்பட்ட சப்பவங்கள் மிகவும் சகஜம், நீ

சொல்லுவதுபோல் தெய்வம் உன்னைக்—" என்று தன் பேச்சை முடிக்குமுன், அவனுடைய மகள் தங்கம்மாள், அலங்கோலமாய் அங்கு ஓடிவந்து, சொல்லொணா பீதியுடனும் தடுமாற்றத்துடனும்,

"ஐயோ! நான் என்ன செய்வேன். வாசலில் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்துவிட்டாரே." என்று அலறவே, கோபால செட்டியாரும் பாலகிருஷ்ணனும் வெளியே ஓடினார்கள்.

அவர்கள் சென்றதும் தங்கம்மாள் ஓடி தன் புருஷனைக் கட்டிக்கொண்டு,

"ஐயோ! நான் உங்களை விடமாட்டேன், விடமாட்டேன்." என்று கதறினாள்.

பிறகு அரைமணி நேரத்திற்குள் வாசுதேவன் கைது செய்யப்பட்டான்.

* * * * *

அன்றிரவு சுமார் 9 மணியிருக்கும்.

அச்சமயம், அன்று நடந்த மரண விசாரணையில், வாசுதேவன் கொலை நடந்த இரவு $11\frac{1}{4}$ மணிக்கு முத்தையா செட்டியாருடைய வீட்டிற்குள்ளிருந்து வந்ததைத் தான் பார்த்ததாக சாக்ஷி கூறிய ராமலிங்கம் என்ன செய்து கொண்டிருந்தானென்பதைக் கவனிப்போம். அவன் தன் வீட்டில் வெளியே செல்லத் தயாராய் நின்றுகொண்டிருந்தான். பிறகு, அவ்வீட்டிலிருந்த மற்றொருவனை யழைத்து, தான் ஒரு முக்கிய காரியார்த்தமாய் வெளியே போய்விட்டு வருவதாகவும், அதுவரையில் வீட்டை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளும்படியும் கூறிவிட்டு, வெளியே வந்து துரிதமாய் நடக்கவாரம்பித்தான். அவன் கொஞ்சதூரம் சென்றதும், அவனுடைய வீட்டின் பக்கத்திலுள்ள ஒரு சந்திலிருந்து, சுமார் 18 வயதுள்ள ஒரு வாலிபன் வெளிக்கிளம்பி அவனைப் பின்பற்றி நடந்தான்.

இவ்விதம் இருவரும் சுமார் முக்கால் மணிநேரம் நடந்துகொண்டே யிருந்தனர். ராமலிங்கம் அவ்விதம்

ஒருவன் தன்னைத் தொடர்ந்து வருவதை அறிந்தவனல்ல. கடைசியில் அவன் ஒரு இருள்சூழ்ந்த சந்திற்குள் நுழைந்து, அதன் முடிவில் காணப்பட்ட ஒரு சிறு வீட்டையணுகி, அதன் கதவை, "நாகலிங்கம்; நாகலிங்கம்." என்று மெல்ல அழைத்தவண்ணம் தட்டினான். உடனே கதவு திறக்கப்பட்டதும், உள்ளே சென்றான். மறுநிமிஷம் கதவு மறுபடியும் உட்பக்கம் தாளிடப்பட்டது.

அவ்வீட்டிற்குள்ளும் விளக்கின்றி இருள் சூழ்ந்து கொண்டிருந்ததால் அவ்வீட்டின் அமைப்பையாவது, அல்லது நாம் சொன்னவிதப் ராமலிங்கத்தை உள்ளே அழைத்துவந்தவனுடைய வெளித்தோற்றத்தையாவது நாம் வர்ணிக்கமுடியவில்லை. நிற்க, உள்ளே நுழைந்த ராமலிங்கம்,

"ஏன்? விளக்கில்லையோ?" என்று வினவ, மற்றொருவன்,

"பேசுவதற்கு விளக்கவசியமில்லை. அதிருக்கட்டும்; என்னை 'நாகலிங்கம்' என்று அழைக்காதே யென்று, எவ்வளவு தரம் சொன்னாலும் உனக்கு ஏன் மூளையில்லை? உன்னாலேயே நான் மாட்டிக்கொள்ளுவேன் என்பது நிச்சயம்." என்று வெறுப்புடன் கண்டித்தான்.

ராமலிங்.—தயவுசெய்து மன்னித்துவிடு. என்னையறியாமல் சொல்லிவிட்டேன். இனிமேல் மிகவும் ஜாக்கிரதையாயிருப்பேன்.

மற்றோ.—சரி; மரண விசாரணையின் சேதியென்ன?

ராமலிங்.—சேதியென்ன? உன்னிஷ்டப்படியே கூறிவிட்டேன். செட்டிப் பயலுடைய மகனை ஏற்கனவே கைது செய்துவிட்டார்கள்.

மற்றோ.—பேஷ்! ஆமாம்; உன்னை யாராவது சந்தேகித்தார்களோ?

ராமலிங்.—இல்லவேயில்லை. நானென்ன பைத்தியமா? நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டு, கடைசி-

யில் அந்தப் பையனைக் காண்பிக்கும்பொழுது, அப்படிச் செய்ய சிறிதும் இஷ்டமில்லாதவன்போல், அபிநயித்தேன்.

மற்றோ.—சபாஷ்; அது ரொம்ப நல்ல வேலைதான். இருந்தபோதிலும் நாம் மிகவும் தைர்யத்துடனிருப்பது பிசகு. ஏனென்றால் போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யர் லேசான பேர்வழியல்ல. நாம் எவ்விதத்திலாவது கொஞ்சம் தவறிவிட்டால் உடனே பிடித்துவிடுவார். அதுவுமன்றி, அவரிடம் நாம் முத்தையா செட்டிக்கு இரகஸ்யமாய் எழுதிய அக்கடிதங்கள் மாட்டிக்கொண்டிருக்கின்றன. அவர் எப்படியும் அவைகளின் மர்மத்தைக் கண்டுபிடித்துவிடுவாரென்பது நிச்சயம்.

ராமலிங்.—வாஸ்தவம். அப்படியானால் ஏன் உடனே கம்பி நீட்டிவிடக்கூடாது? இவ்வூருக்கு வந்து 4 மாதகாலத்திற்கு மேலாய்விட்டதே?

மற்றோ.—நியாயமே. இன்னும் ஒரு வாரத்திற்குமேல் இங்கிருப்பதாக எனக்கு உத்தேசமில்லை. ஆனால் அதற்குள் ஒரு காரியம் செய்யத் தீர்மானித்திருக்கிறேன்.

ராமலிங்.—என்ன அது?

மற்றோ.—இவ்வூர் வக்கீல் ராமஸ்வாமி அய்யர் வீட்டில் 20000 ரூபாய் மதிப்புள்ள வைர நகைகளுண்டாம். அவைகளை அடித்துவிடவேண்டும். இந்த வக்கீல் ராமஸ்வாமி அய்யர், பண மமதையினால், பல அக்கிரமங்கள் செய்வதாகத் தெரியவருகிறது. அவர், ஏழைகளை மிருகங்களென்று நினைத்து, அவர்களைத் தன்னால் முடிந்தவரையில் அவமானப்படுத்துவது வழக்கமாம்.

ராமலிங்.—ஆமாம்; அதற்குவேண்டிய ஏற்பாடுகளெல் [illegible]

மற்ருே. ஆய்விட்டன. அதை இந்த சனிக்கிழமை செய்யத் தீர்மானித்திருக்கிறேன். அன்று அவருடைய வீட்டில் ஏதோ விசேஷமாம.

ராமலிங்.—சரி; காமாக்ஷிபுரம் செய்தியென்ன?

மற்ருே.—அடாடா! மறந்துவிட்டேனே. அவ்வூர் துப்பறியும் இலாகாவைச் சேர்ந்த அந்தப் பயல் ஈசுவரதாஸ், எப்படியோ நான் இவ்வூரிலிருப்பதை யறிந்து, இங்கு வட்டமிடுகிருன். அவனை இன்று மாலை கடைத்தெருவில் கண்டேன். ஆனல் நான் மாறுவேஷம் அணிந்துகொண்டிருந்ததால் அவனுல் என்னை அடையாளங் கண்டுபிடிக்க முடியவில்லை. சரி; மணி 11க்கு மேலிருக்கும். நீ போகலாம். (என்று கூறவே, ராமலிங்கம் போய்விட்டான்.)

அவன் சென்றதும் மற்ருெருவன் மறுபடியும் வெளிவாசற் கதவைத் தாளிட்டுவிட்டு, உள்ளே சென்ருன். ஆனல் கால்மணி நேரத்திற்கெல்லாம், கதவு மறுபடியும் தட்டப்படவே, வெளியே வந்து உடனே அதைத் திறக்காமல், "யாரது?" என்று தாழ்ந்த குரலில் வினவ, வெளியிலிருந்து,

"ஏன்? நான்தான் மைனர்," என்று வெளியிலிருந்தவன் விடையளித்தான். அது நம் டாக்டர் கேசவ முதலியாருடைய தமக்கை மகன் கோவிந்தசாமியேயொழிய வேறல்ல

*   *   *   *   *

நிற்க, அதே இரவு சமார் 11 மணிக்கு, போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யர், சிந்தனையிலாழ்ந்தவராய், தன் வீட்டிலுட்கார்ந்துகொண்டிருந்தார். அவருடைய சிந்தனைக்குக் காரணம், முத்தையா செட்டியாரின் கொலையே என்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. முன்னெரு அத்தியாயத்தில் நாம் அவரைப்பற்றிக் கூறியபொழுது, அவர் மகா சாமர்த்தியவானென்றும், அவர் இவ்வூருக்கு வந்த பிறகு, அதுவரையில் போலீஸாரையே மடையர்களாக்கி வந்த பல சண்டாளர்களைப் பிடித்து தண்டனைக்குள்ளாக்

கினுமென்றும் சொல்லியிருக்கிருேம். ஆனுலும் சென்ற மூன்று நான்கு மாதங்களாக அவ்வூரில் பல விசித்திரமான கொள்ளைகள் நடந்துவந்தன.

"சரி; நான் முத்தையா செட்டியாருடைய வீட்டிலிருந்து கண்டெடுத்த (யூகாக்ஷரங்களில் எழுதப்பட்ட) அச்சிறு கடிதங்களிலிருந்து செட்டியாரும் இந்த விசித்திரமான கொள்ளைகளை யடித்துவரும் திருடர்களுடன் சம்பந்தப்பட்டிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன். அவர்கள் தாங்கள் களவாடும், நகைகளை முத்தையா செட்டியார் மூலம் பணமாக்கிக்கொள்ளலாம். இவ்விதம் திருடர்களுக்கு உட்கையாயிருக்கும் வியாபாரிகள் முடிவில் அவர்களாலேயே கொல்லப்படுவது அசாதாரணமல்ல. ஆகவே செட்டியாரைக் கொலை செய்ததும், இதுவரையில் என்னிடமிருந்து தப்பிவரும் இத்திருடர்களாகவேயிருக்கவேண்டும். இன்னும் இன்று மரண விசாரணையில் சாக்ஷி கூறிய ராமலிங்கமும் இத்திருடர்களைச் சேர்ந்தவனென்பதில் சந்தேகமில்லை. சாதாரணமாய் இப்பாவிகள் தாங்கள் செய்த குற்றங்களின் பழியை பிறர்மேல் சுமத்த ஏற்பாடு செய்வது சகஜமே. எப்படியோ முத்தையா செட்டிக்கும் அவருடைய மகன் வாசுதேவனுக்கும் மனஸ்தாபமுண்டென்பதையும், இன்னும் கொலை நடந்த தினம் அவ்விருவருக்கும் அடிதடி நடந்ததையும் இவர்கள் தெரிந்துகொண்டு, இப்பழியை அப்பையன்மீது சுமத்த, தங்களில் ஒருவனையே சாக்ஷியாகவும் அனுப்பியிருக்கலாம். இருக்கட்டும்; நான் ராமலிங்கத்தைப் பின்தொடரும்படி அனுப்பியிருக்கும் தங்கவேலு என்ன கண்டுபிடித்தானென்பதைப் பார்ப்போம்.—" என்று அவர் சிந்தித்துக்கொண்டிருக்கும் பொழுதே, தங்கவேலு அவரிடம் வந்து நமஸ்கரித்தான். இவ்வாலிபனே ராமலிங்கத்தைப் பின்பற்றிச் சென்றவன்.

தங்க.—ஸ்வாமி! இந்தக் கேஸ் மிகவும் விநோதமாய் முடியுமென்று தோன்றுகிறது. நாம் சந்தேகித்தபடி, ராமலிங்கம், பிறருடைய போதனையால், இன்று மரண விசாரணையில் சாக்ஷி கூறினுனென்பது நிச்சயம்.

சபே.—சரி; நீ கண்டதை யெல்லாம் விபரமாய்ச் சொல்.

தங்க.—ராமலிங்கம் மரண விசாரணை நடந்த இடத்தி லிருந்து நேரே தன் வீட்டிற்குச் சென்றான். பிறகு, இரவு 9 மணி வரையில், வெளியே வரவில்லை. அதன் முடிவில், வெளியே வந்து வேகமாய் நடக்கவாரம் பித்தான் பிறகு, முக்கால்மணி நேரத்திற்கெல்லாம் 29 நம்பர் வீதயின் இடதுகைப் பக்கத்திலிருக்கும் ஒரு சந்திற்குள் நுழைந்து, அதன் கோடியிலிருந்த ஒரு வீட்டிற்குள் சென்று, சுமார் 1 மணி நேரம் வரையில் ஒருவனுடன் பேசிக்கொண்டிருந்தான்.

சபே.—அவர்களுடைய சம்பாஷணையை நீ கேட்க முடிந்ததா?

தங்க.—அது சாத்தியப்படவில்லை. ஆனால் சில வார்த்தை கள் மட்டும் நான் கேட்கமுடிந்தது. அவைகளி லிருந்து, ராமலிங்கத்தை அவ்விதம் மரண விசாரணை க்கனுப்பியது அவன் கண்டு பேசிய மற்றொருவனே யென்பதையும், அவன் ஏற்கனவே காமாக்ஷிபுரத்தில் செய்த சில குற்றங்களுக்காக, அவ்வூர் துப்பறியும் ஈசுவரதாஸ் இவ்வூரில்—

சபே.—(ஆவலுடன்) என்ன? ஈசுவரதாஸா? சரி; ராம லிங்கம் கண்டு பேசிய அம்மற்றொருவனுடைய பெயர் என்ன வென்பதை—

தங்க.—அவனுடைய பெயர் நாகலிங்கம்.

இப்பெயரைக் கேட்டதும், சபேசய்யர், ஆச்சர்யத் தின் மிகுதியால், அப்படியே தன் ஆஸனத்திலிருந்து தாவிக் குதித்து பூமியில் நின்றார். பிறகு, அவசரத்துடன், சமீபத்திலிருந்த ஒரு மேஜையை யணுகி, அதிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்து, மேலும் ஆவலுடன் வாசிக்க லானார். அதில் கீழ்க்கண்டவாறு எழுதப்பட்டிருந்தது.—

காமாக்ஷிபுரம், 18—2—28.

இன்ஸ்பெக்டர் சபேசய்யர் அவர்களுக்கு,

இதுவரையில் நான் உங்களை நேரில் கண்டு பேச சந்தர்ப்பம் ஏற்படாவிட்டாலும் உங்களுடைய

கீர்த்தியைப்பற்றி மிகவும் கேட்டிருக்கிறேன். கூடியசீக் கிரம் நேரில் காணும் பாக்கியத்தையும் அடைவேனென்று எதிர்பார்க்கிறேன்.

நிற்க, 6 மாதகாலத்திற்கு முன், காமாக்ஷிபுரத்தில் நாகலிங்க நாடான் என்ற கொலைபாதகன் பிடிக்கப்பட்டு, பிறகு நடந்த விசாரணையில் மரண தண்டனை விதிக்கப் பட்டானென்பதையும், ஆனால் விசாரணை நடந்த அதே இரவு அவன் சிறைச்சாலையிலிருந்து தப்பிவிட்டானென் பதையும் நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதைப்பற்றிய விபரம் உங்களுடைய ஸ்டேஷனுக்கும் அனுப்பப்பட் டிருக்கிறது. அவன் இப்பொழுது கிரிபுரத்தில் இருப்ப தாகத் தெரியவருகிறது. இக்கடிதத்துடன் அவனுடைய புகைப்படமொன்றும், அங்க அடையாளங்களின் விபரமும் அனுப்பியிருக்கிறேன். அவனைப் பிடிக்க உங்களால் முடிந்த வரையில் பிரயத்தனப்படும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் அவன் மஹா தந்திரசாலியென்பதையும், மாறுவே ஷமணிந்துகொள்ளுவதில் நிகரற்றவனென்பதையும் அறி யவும்.

நானும் சில தினங்களில் அங்கு வருவேன்.

ஈசுவரதாஸ்,

அத்தியாயம் 7.

6வது அத்தியாயத்தில் கூறப்பட்ட சம்பவங்கள் நடந்து இரண்டு தினங்களாய்விட்டன. அன்று வெள்ளிக் கிழமை. காலை 8 மணி இருக்கும்.

அச்சமயம் பாலகிருஷ்ணன் நகைவியாபாரி முத்தை யா செட்டியாருடைய வீடு இருந்த தெருவின் வழியாய்ப் போய்க்கொண்டிருந்தான். அவன் கால்கள் மட்டும் நடந்து கொண்டிருந்தனவே யொழிய, அவனுடைய ஞாபகம் முழு மையும் வேறு இடத்தில் இருந்தது. தன் தங்கை புருஷன் கைது செய்யப்பட்டதிலிருந்து, அவன் அநுபவித்துவந்த

கவலையையும் கஷ்டத்தையும் வர்ணிக்க முடியாது. இன்னும், அவன் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும், அவனுக்கு முத்தையா செட்டியாருடைய கொலையின் மர்மம் சிறிதும் விளங்கவில்லை. ஆகவே என்ன செய்வதென்று புரியாமல் திகைப்புற்று தத்தளித்துக்கொண்டிருந்தான். வாசுதேவன் கைது செய்யப்பட்ட மறுதினமே மாஜிஸ்டிரேட் முன்பு நிறுத்தப்பட்டு ஒருவாரம் ரிமாண்டில் வைக்கப்பட்டான். கோபால செட்டியார் தான் தீர்மானித்த பிரகாரம் முத்தையா செட்டியாரை வாஸ்தவத்தில் கொலை செய்தவனைக் கண்டுபிடிப்பவருக்கு ரூ. 10000 பரிசளிப்பதாக எல்லா முக்கிய வர்த்தமானப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்திருந்ததுமன்றி, அப்பேர்ப்பட்ட கொலைக் கேஸ்களை நடத்துவதில் மிகவும் கியாதிபெற்ற வக்கீல் P. பாலசுப்பிரமணியய்யரையும் அமர்த்தியிருந்தார். ஆனபோதிலும் பாலகிருஷ்ணனுடைய மனதில் சமாதானம் சிறிதும் ஏற்படவில்லை. நாம் சொன்னவிதம் நடந்துகொண்டேயிருந்தவன் முத்தையா செட்டியாருடைய வீட்டின் சமீபம் வந்தபொழுது, சமீபத்தில் யாரோ ‘பாலகிருஷ்ணா! பாலகிருஷ்ணா!’ என்று அழைக்கும் சப்தம் கேட்கவே, நாலாபக்கங்களையும் கவனித்தான். முத்தையா செட்டியாருடைய வீட்டின் எதிர்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்த சுமார் 60 வயதுள்ள ஒரு பிராமணக் கிழவர், அவனுடைய பார்வை தன்மேல் விழுந்ததும்,

“வா; வா. நான்தான் கூப்பிட்டேன்.” என்று சொல்லவே, பாலகிருஷ்ணன, வியப்புற்று, அவரை சமீபித்து, தானும் அத்திண்ணையில் உட்காருந்தருவாயிலிருந்தான். ஆனால் அக்கிழவர்,

“வா; உள்ளே போவோம். இங்கு உட்கார்ந்துகொண்டு பேசுவது பிசகு.” என்று கூறிக்கொண்டே எழுந்து வீட்டிற்குள் பாலகிருஷ்ணனுடன் சென்றார். உள்ளே முன் கூடத்தில் போடப்பட்டிருந்த இரு ஆஸனங்களில் ஒன்றில் தான் உட்கார்ந்துகொண்டு மற்றொன்றில் பாலகிருஷ்ணனை அமர்ந்துகொள்ளும்படி பிரியத்துடன் உபசரித்தார். ஆவ

வர, பாலகிருஷ்ணனுடைய ஆச்சர்யமும் ஆவலும் அதிகரித்துக்கொண்டேவந்தன. அவன், கிழவர் எதைப்பற்றிப் பேசக்கூடுமென்பது சிறிதும் விளங்காமல், அவருடைய முகத்தை யுற்றுநோக்கியவண்ணமிருந்தான். கிழவர்,

“அப்பா! நீ என்னைப் பார்த்ததுமே நான் நோயாளியென்பதை அறிந்துகொள்ளலாம். நான் இரவு முழுமையும் நன்றாய்த் தூங்குவதில்லை. நான் தினந்தோறும் இவ்வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொள்வது வழக்கம்.” என்றார்.

இதைக் கேட்டதும் பாலகிருஷ்ணனுடைய முகம் மலர்ந்தது. ஒருக்கால் அக்கிழவர், கொலை நடந்த தினமும் தூங்காமலிருந்து, முத்தையா செட்டியாருடைய வீட்டில் நடந்த எல்லாவற்றையும் கவனித்திருக்கக்கூடுமென்றும், அதன்பலனாய் வாஸ்தவத்தில் கொலை செய்தவனையும் பார்த்திருப்பாரென்றும் நம்பி மனக்கோட்டை கட்டவாரம்பித்தான். ஆனால் அதை ஊகித்தறிந்த கிழவர்,

“அப்பா! உன் முகத்தைப் பார்த்தால் நான் ஏதோ மிகவும் முக்கியமான விஷயம் சொல்லுவேனென்று நீ எதிர்பார்ப்பதுபோலிருக்கிறது. அப்படி யொன்றுமில்லை. ஆனால் துப்பறிபவர்கள் அற்ப விஷயங்களைக்கொண்டு, மிகவும் சிக்கலுள்ள மர்மங்களைக் கண்டுபிடிப்பார்களென்று எனக்குத் தெரியுமாகையால், தற்சமயம் என்வசமிருக்கும் வஸ்துவும் பிரயோஜனப்படுமென்று நம்புகிறேன்.” என்றார். உடனே, பாலகிருஷ்ணன், அடக்க இயலாத ஆவலுடன்,

“ஸ்வாமி! தயவுசெய்து விஷயத்தை சீக்கிரம் சொல்லும்படி மிகவும் பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.” என்று கெஞ்சினான்.

கிழவர்:— ஆனால் முதலில் நான் ஒரு விஷயத்தைத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். நான் சீக்காளி. எனக்கு ஆதியிலிருந்தே போலீஸாரைக் கண்டால் பிடிப்பதில்லை. அவர்கள் தங்களிடம் மாட்டிக்கொள்ளும் சாக்ஷிகளைப் படுத்தும் பாடு தெய்வத்துக்குத்தான்

தெரியும். இன்னும் சாக்ஷி சொல்லும்பொருட்டு வீட்டிற்கும் கச்சேரிக்கும் அலைய எனக்கு இஷ்டமில்லை. இஷ்டமிருந்தபோதிலும் அதற்கு என்னிடம் சக்தியில்லை. ஆகவே, நான் கேட்டுக்கொள்ளுவது என்னவென்றால், நான் இவ்விஷயத்தை உன்னிடம் சொல்லுவதின் பலனாய் எனக்கு தொந்திரவு கிஞ்சித்தும் ஏற்படக்கூடாது. இக்காரணத்தாலே, இதுவரையில் நான் இதை போலீஸாரிடம் சொல்லவில்லை. ஆனால் முத்தையா செட்டியின் மகன் இக்கொலையைச் செய்ததாக கைது செய்யப்பட்டிருப்பதை யறிந்ததும், இதை என் மனதிலேயே வைத்துக்கொண்டிருக்க எனக்கிஷ்டமில்லை. அந்தப் பையனை எனக்கு நன்றாய்த் தெரியும். அவன் பரம யோக்கியன். இக்கொலையை அவன் ஒருநாளும் செய்திருக்கமாட்டான்.

பால :— ஸ்வாமி! உங்களுக்கு அனந்தகோடி நமஸ்காரம். நீங்கள் சொல்லப்போகும் விஷயத்தின் பலனாய், வாசுதேவன் குற்றவாளி யல்லவென்று ரூபிக்கக் கூடுமானால் நாங்களெல்லோரும் சாகும்வரையில் உங்களை எங்கள் குலதெய்வமென்றே மதிப்போம். இன்னும் இதனால் உங்களுக்கு யாதொரு தொந்தரவும் வராமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். நீங்கள் பேசுவதிலிருந்து, உங்களுக்கு என் தங்கை புருஷன் வாசுதேவனிடம் மிகவும் பிரியமுண்டென்று தோன்றுகிறது. அவன் நிரபராதி யென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ஆகவே, உங்களால் முடியுமானால், அவனைக் காப்பாற்றுவது உங்களுடைய கடமை.

கிழவர் :— வாஸ்தவம். அப்பையன் கைது செய்யப்படாவிட்டால் இதை நான் வெளியிடவே மாட்டேன். ஆனால் நான் சொல்லப்போகும் விஷயத்திலிருந்து, அவனைக் காப்பாற்ற முடியுமா முடியாதாவென்று எனக்குத் தெரியாது.

பால :— அதனால் பாதகமில்லை. எதுவாயிருந்தபோதிலும் உடனே சொல்லுங்கள்;

கிழவர் :— சொல்லுகிறேன் கேள். கொலை நடந்த இரவும் நான் இவ்வீட்டுத் திண்ணையில் படுத்துக்கொண்டிருந்தேன். ஆனால் 12 மணி வரையில் நன்றாய்த் தூங்கிவிட்டேன். பிறகு நான் விழித்துக்கொண்டு, ஒண்ணுக்குப் போகும்பொருட்டு, எழுந்திருக்கும்பொழுது முத்தையா செட்டியாருடைய வீட்டிற்குள்ளிருந்து ஒருவன் வெளியே வருவதைக் கண்டேன். ஆனால் அதை நான் முதலில் கவனிக்கவில்லை. ஏனென்றால் செட்டியாரிடம் ஜனங்கள் அகாலத்தில் வருவது மிகவும் சகஜம். இருந்தபோதிலும் நான் சொன்ன பேர்வழி வெளியே வந்ததும் திருடன்போல இரு திசைகளையும் பார்த்துக்கொண்டே பதுங்கிய வண்ணம் நடக்கவே, என் மனதில் சந்தேகம் தோன்றியது. அதுவுமன்றி, அவன் வெளியே வந்ததும், அவனுடைய சட்டைப் பையிலிருந்து என்னமோ கீழே விழுந்ததைக் கண்டேன். பிறகு மெல்ல நடந்து, அதென்னவென்று பார்த்தபொழுது, அது ஒரு கடிதமென்பதைக் கண்டேன். ஆனால் அச்சமயம் உள்ளே முத்தையா செட்டி கொலை செய்யப்பட்டுக் கிடக்கிறானென்பது எனக்குத் தெரியாது. இருந்தபோதிலும் அக்கடிதத்தை யெடுத்துக்கொண்டேன். அது ஆங்கிலேய பாஷையில் எழுதப்பட்டிருக்கிறது. எனக்கொன்றும் புரியவில்லை. வேண்டுமானால் தருகிறேன். வாசித்துப் பார். (என்று சொல்லிவிட்டு எழுந்து சென்று 5 நிமிஷ நேரத்திற்கெல்லாம் ஒரு கடிதத்துடன் திரும்பி வந்தார்.)

இதற்குள் பாலகிருஷ்ணனுடைய ஹிருதயம் படபடவென்று அடித்துக்கொண்டிருந்தது. கிழவர் அக்கடிதத்தைத் தன்னிடம் கொடுத்ததும், அதை ஆவலுடன் வாசிக்க ஆரம்பித்தான். உடனே சந்தோஷத்தின் மிகுதியால் ஒருதரம் தன்னைத்தானே மறந்தவனாய்க் குதித்தான். அக்கடிதம் ஒரு அஸையனைக் காட்டியொழிய வேறல்ல. அதில் காணப்பட்ட முத்திரையிலிருந்து, அது கொலை நட

ந்த தினம் மாலை 5 மணிக்குத்தான் கிரிபுரம் வந்து சேர்ந்ததென்பது வெளியாயிற்று. அதில் கீழ்க்கண்ட மேல்விலாஸம் காணப்பட்டது.

“ஆர். கோவிந்தசாமி முதலியார்,
13 நம்பர் வீடு, 3 நம்பர் வீதி, கிரிபுரம்”.

பாலகிருஷ்ணன், நாம் சொன்னதுபோல் ஒருதரம் குதித்துவிட்டு, கொஞ்சநேரம் பேசவும் சக்தியற்றவனாய் அசைவின்றி நின்றான். பிறகு கிழவரைப் பார்த்து,

“ஸ்வாமி! இது மிகவும் முக்கியமான கடிதம். இதிலிருந்து பல விஷயங்கள் வெளியாகக் கூடுமென்பது நிச்சயம்.” என்றான்.

ஆனால் கிழவர் அவனுடைய ஆச்சர்யத்தையும் சந்தோஷத்தையும் கவனிக்கவேயில்லை. அவர்,

“சரி! எப்படியாவது வாசுதேவன் இந்த இக்கட்டிலிருந்து தப்பினால் போதும். நீ வேண்டுமானால் இக்கடிதத்தை எடுத்துக்கொண்டு போ. ஆனால் உடனே சென்று இதைப் போலீஸாரிடம் காண்பித்து, அவர்களை என்னிடம் அனுப்பிவிடாதே. அவர்கள் என் பாக்கிப் பிராணனையும் வாங்கிவிடுவார்கள்.” என்று கூறவே, பாலகிருஷ்ணன்,

“அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். சரி; நான் உத்தரவு வாங்கிக்கொள்ளட்டுமா?” என்று மரியாதையுடன் கிழவரை நமஸ்கரித்துவிட்டு, குதூகலத்துடன் வெளியே சென்றான்.

பாலகிருஷ்ணன் நடந்துகொண்டே சிந்திக்கலானான்.

“பேஷ்! கொலை நடந்த இரவு மைனர் கோவிந்தசாமியும் அவ்வீட்டிற்குப் போயிருக்கிறானென்பது நிச்சயம். ஆனால் அவன் கொலை செய்யவும் துணிவானென்று எனக்குத் தோன்றவில்லை. இருந்தபோதிலும் அவனுக்கு இதன் மர்மம் தெரிந்திருக்கவேண்டும். ஒருக்கால் கொலைசெய்தது டாக்டர் கேசவ முதலியாராயிருக்குமோ? சீச்சீ! ஒருநாளுமிருக்க முடியாது. அப்படியானால் அவர் எப்படி இப்

பாபியிடம் (மைனர் கோவிந்தசாமி) மாட்டிக்கொண்டார்? இருக்கட்டும்; இதில் நாம் அவசரப்படுவது பிசகு. இன்னும் இதை நான் உடனே போலீஸாருக்குத் தெரிவிப்பதும் உசிதமல்ல. கோவிந்தசாமியை ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டும். ஆனால் அவனையும் உடனே சென்று பயமுறுத்துவது பிசகு. ஏனென்றால் அவன் பலே போக்கிரி” என்று சிந்தித்தவண்ணம் தன் தோழன் ராமானுஜத்தின் வீட்டை நோக்கி துரிதமாய் நடந்தான். கடைசியில் அவன் அவ்வீட்டின் சமீபம் வந்தபொழுது, அதிலிருந்து இருவர் வெளியே வருவதைக் கண்டான். அவர்களைக் கண்டதும் பாலகிருஷ்ணனுக்கு உண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. உடனே, அவர்கள் தன்னைப் பார்க்காவண்ணம், மறைந்துகொண்டான். அதில் ஒருவனுக்கு சுமார் 18 வயதிருக்கும். அவன் ராமானுஜத்தின் வீட்டில் குடியிருந்த வக்கீல் புருஷோத்தம செட்டியாருடைய குமாஸ்தாவென்பது பாலகிருஷ்ணனுக்குத் தெரியும். மற்றொருவன் மைனர் கோவிந்தசாமியின் நண்பனாகிய கிட்டுவேயொழிய வேறல்ல. உடனே பாலகிருஷ்ணன்,

“ஓஹோ! இதில் ஏதோ விசேஷமிருக்கவேண்டும். புருஷோத்தம செட்டியாருடைய குமாஸ்தா கிட்டுவய்யரின் தோழனென்பது இதுவரையில் எனக்குத் தெரியாது. இப்பொழுது இந்த குமாஸ்தா கோவிந்தசாமிக்கு உட்கையாயிருந்து, அப் பத்திரங்களை ராமானுஜத்தின் அறையில் ஒளித்து வைத்திருக்கலாமென்று தோன்றுகிறது.” என்று யோசித்துக்கொண்டே, ராமானுஜத்தின் வீட்டுத் திண்ணைமீது ஏறினான். அதே சமயம் வக்கீல் புருஷோத்தம செட்டியார் வெளியே வந்தார். அவரைக் கண்டதும் பாலகிருஷ்ணன், அச்சமயம் கொஞ்சதூரத்தில் சென்றுகொண்டிருந்த கிட்டுவையும் அவருடைய குமாஸ்தாவையும் காண்பித்து,

“அதோ உங்களுடைய குமாஸ்தாவுடன் போவது யாரென்பது உங்களுக்குத் தெரியுமா?” என்று வினவினான். வக்கீல்,

"ஏன்? தெரியும். அவன் என் குமாஸ்தாவின் தமையன்." என்று விடையளிக்கவே, பாலகிருஷ்ணன், வியப்புற்று, ஆனாலும் தன் ஆச்சர்யத்தை மறைத்துக்கொண்டு,

"அப்படியா? இருவர்களுடைய முகஜாடையும் ஒன்றாயிருந்ததால் கேட்டேன்." என்று கூறியவண்ணம், வக்கீலை நமஸ்கரித்துவிட்டு அவனுடன் மாடியிலிருந்த தன் நண்பனுடைய அறைக்குச் சென்றான்.

அங்கு, ராமானுஜம், துக்கசாகரத்தில் மூழ்கியவனாய், தன் கையிலிருந்த ஒரு கடிதத்தை உற்றுநோக்கியவண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்தான். அவனுடைய கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது. அவனுடைய நிலைமையைக் கண்டதும், பாலகிருஷ்ணன், திடுக்கிட்டு,

"என்னடா? என்ன சமாசாரம்?" என்று அவசரத்துடன் வினவ, ராமானுஜம் விடையளிக்காமல், தன் கையிலிருந்த கடிதத்தை தன் நண்பனிடம் எறிந்தான். உடனே பாலகிருஷ்ணன் அதை எடுத்து வாசித்தான். அது ஒரு கல்யாணப் பத்திரிகை. அதிலிருந்து டாக்டர் கேசவமுதலியாருடைய மகள் மரகதவல்லிக்கும், மைனர் கோவிந்தசாமிக்கும் அடுத்த திங்கட்கிழமை விவாஹமென்பது வெளியாயிற்று. அதை வாசித்ததும், பாலகிருஷ்ணன், ராமானுஜத்தைப் பிரியத்துடன் தொட்டு, புன்சிரிப்புடனும் உறுதியுடனும்,

"இக்கல்யாணம் நடக்காதென்பது நிச்சயம். நீ வீணாய் வருத்தப்படாதே." என்று கூறினான். இதைக் கேட்டதும், ராமானுஜம், அளவுகடந்த ஆவலுடன்,

"என்ன? நடக்காதா? அதற்குக் காரணமென்ன?" என்று வினவ, பாலகிருஷ்ணன்,

"ஏனென்றால், ஏற்கனவே அந்தப்பயல் கோவிந்தசாமி என்னிடம் சிக்கிக்கொண்டுவிட்டான். இன்னும் இரண்டு தினங்களுக்குள் அவனுடைய அயோக்கியத்தனம் முழுமையும் வெளியாய்விடும்." என்று தனக்குத் தெரிந்த

எல்லாவற்றையும் விபரமாய்க் கூறினான். உடனே ராமானுஜத்தின் முகம் மறுபடியும் மலர்ந்தது. அவன்,

"பாலகிருஷ்ணா! ஆனால் நான் மரகதவல்லியை கடைசியில் அடைய முடியுமென்று உனக்குத் தோன்றுகிறதோ?" என்று வினவினான்.

பால:—அதில் சந்தேகமில்லை. உங்களைப்போன்ற காதலர்களை கடவுள் பிரிக்கமாட்டார். சரி; எனக்கு புருஷோத்தம செட்டியாருடைய குமாஸ்தாவுடன் கொஞ்சம் பேசவேண்டும்.

ராமா:—ஏன்? அவனுடன் உனக்கு என்ன வேலை?

பால:—அவனே அப்பத்திரங்களை உன் அறையில் ஒளித்துவைத்தானென்பது நிச்சயம். அவன் கோவிந்தசாமியின் தோழனாகிய கிட்டுவய்யரின் தம்பியாம்.

ராமா:—(வியப்புற்று) என்ன கிட்டுவய்யரின் தம்பியா? இதை நீ எப்படி அறிந்தாய்?

பால:—அது எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். சரி; அவன் மாலைவேளையில் இங்கு வேலைக்கு வருவது உண்டா?"

ராமா:—உண்டு. ஆனால் நாம் அதுவரையில் ஏன் காத்துக்கொண்டிருக்கவேண்டும்? அவனுடைய வீடு இருக்கும் இடம் எனக்குத் தெரியும். அங்கு உடனே போவோமே.

பால:—அப்படியல்ல. இதில் நாம் அவசரப்படுவது பிசகு. அவன் மாலை எத்தனை மணிக்கு இங்கு வருவது வழக்கம்?

ராமா:—5 மணிக்குள் வந்துவிடுவான்.

பால:—சரி; நானும் அதற்குள் இங்கு வருகிறேன். (என்று கூறிவிட்டு, விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.)

தன் நண்பன் சென்றதும், ராமானுஜம், அறையைப் பூட்டிக்கொண்டு, கீழே சென்றான். அன்று வீட்டில் அவனைத் தவிர வேறு ஒருவருமில்லை. ஏனென்றால், திரிபுரத்திலிருந்து 40 மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமத்தில் தன் புருஷனுடன் வாழ்ந்துகொண்டிருந்த அவனுடைய தங்கைக்கு உடம்பு அசௌக்கியமென்று முதல் நாள் செய்தி வந்ததால், அவனுடைய தந்தை, தாயார், தம்பி இம்மூவரும், அப்பெண்மணியைப் பார்க்கும்பொருட்டு, அன்று காலமே போய்விட்டனர். ராமானுஜம் ஸ்நானம் செய்துவிட்டு, உடுத்திக்கொண்டு, சாப்பிடும்பொருட்டு சமீபத்திலிருந்த ஒரு ஹோட்டலுக்குச் சென்றான்.

நிற்க, இங்கு அவனுடைய வீட்டின் மற்றொரு பாகத்தில் குடியிருந்த வக்கீல் புருஷோத்தம செட்டியாருடைய குடும்பத்தைப்பற்றிக் கொஞ்சம் சொல்லவேண்டியது அவசியம். அவருடைய மனைவி சமீபத்தில் இறந்துவிட்டாள். அவருக்கு தற்சமயம் 18 வயதுள்ள ஒரு புதல்வனும், 16 வயதுள்ள சுலோசனா என்ற பெயருள்ள ஒரு புதல்வியும் உண்டு. அழகிலும் நற்குணங்களிலும் நம் மரகதவல்லியுடன் ஒப்பிடத்தக்க சுலோசனாவுக்கு இன்னும் விவாஹமாகவில்லை. அம்மங்கை மரகதவல்லியின் அன்பார்ந்த தோழி. இன்னும் அவளுக்கு தன் தோழியை ராமானுஜம் காதலிக்கிறானென்பதும், ஆனால் அவளை விவாஹம் செய்துகொள்ள வகையின்றி தவிக்கிறானென்பதும், நன்றாய்த் தெரியும். அவள் அடிக்கடி சென்று மரகதவல்லியைக் கண்டு பேசுவதுண்டு. ராமானுஜம் தினந்தோறும் தன் அறையில் தன் தோழனிடம் புலம்புவதையெல்லாம் அவள் பக்கத்தறையிலிருந்து உற்றுக்கேட்டு, அவனுடைய வேதனையையும் தாகத்தையும் தன் தோழிக்குத் தெரிவித்துவந்தாள். எனவே, அன்று காலையில், அத்தோழர்களிருவரும் பேசிக்கொண்டிருந்ததையும், அவள் கேட்டுக்கொண்டிருந்தாளாகையால், அவள், "சரி; இவ்விருவருமாகச் சேர்ந்து சீக்கிரம் என் அருமைத் தோழியை அப்பாவியின் வலையிலிருந்து மீட்டுவிடுவார்களென்பது நிச்சயம்

நான் இன்று மரகதவல்லியைக் கண்டு இச்சுபச் செய்தியை சொல்லவேண்டும்." என்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான்.

ஆகவே, அன்று பிற்பகல் 1 மணிக்கு நம் மரகதவல்லி தன் அறையில் தன் காதலனை நினைத்து ஏங்கித் துடித்துக்கொண்டிருக்கையில், சுலோசனா குதூஹலத்துடன் அங்கு வந்துசேர்ந்தாள். அவளுடைய முகமலர்ச்சியையும் பரபரப்பையும் கண்ட அப்பெண்பாவை, ஆவலுடன்,

"என்னடீ? சுலோசனா! என்ன விசேஷம்? உன் முகத்தில் ஆனந்தம் கூத்தாடுகிறதே." என்று வினவ, அச்சிறுமி,

"என் ஆனந்தத்திற்குக் காரணம் நீயே. கூடிய சீக்கிரம் உன் முகத்திலும் ஆனந்தம் தாண்டவமாடுமென்பது நிச்சயம்." என்று விடையளித்தவண்ணம், தன் தோழியின் சமீபத்திலுட்கார்ந்துகொண்டு, பிரியத்துடன் அவளுடைய முகத்தை யுற்றுநோக்கினாள்.

இதைக் கேட்டதும், மரகதவல்லி, ஒன்றும் புரியாமல் திகைப்புற்று,

"அடியே! என்னை வீணாய் பரிஹஸிக்காதே. தற்சமயம் எனக்கும் ஆனந்தத்துக்கும் எவ்வளவுதூரமென்பது உனக்கே தெரியும்." என்று விசனத்துடன் கூறினாள்.

சுலோசனா:—இருக்கலாம். சரி; நான் வந்த கார்யத்தை கவனிப்போம். இன்று காலை உன்னுடைய விவாஹப் பத்திரிகை ராமானுஜ முதலியாருக்கும் வந்தது.

மரகதம்:—ஏண்டி! ஆனால் இதைச் சொல்லும்பொருட்டா இப்பொழுது இவ்வளவு அவசரத்துடன் வந்தாய்? சரி; அப்பத்திரிகையைப் பார்த்ததும் அவர் என்ன செய்தார்?

சுலோசனா:—என்ன செய்வார்? அவர் வாசற்திண்ணையில் நின்றுகொண்டிருந்தபொழுது, உன் வீட்டு வேலைக்

காரன் அதைக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தான். நான் எங்கள் வீட்டு முன் கூடத்திலிருந்து அதைக் கவனித்துக்கொண்டிருந்தேன். பத்திரிகையை வாசித்ததும், முகம் வெளுக்க, அவர் திடீரென்று தன் மண்டைமேல் ஓங்கி அடிக்கப்பட்டவர்போல் காணப்பட்டார். பிறகு ஓடி, தன்னறைக்குச் சென்று, உட்கார்ந்துகொண்டு கால்மணி நேரம் வரையில் சித்தப்பிரமைகொண்டவர்போலிருந்தார். அதன் முடிவில் அவருடைய—

இதைக் கேட்டதும், மரகதவல்லியின் கண்களில் நீர் ததும்பியது. அச்சமயம் அவளுடைய ஹிருதயம் உருகுவதுபோலிருந்தது. அவள், தன் தோழியை மேலே பேசாவண்ணம் தடுத்து,

“ஆமாம்; கூடிய சீக்கிரம் என் முகத்திலும் ஆனந்தம் கூத்தாடுமென்று சொன்னாயே. அதற்குக் காரணமென்ன?” என்று வினவ, சுலோசனை, பாலகிருஷ்ணனுக்கும் ராமானுஜத்துக்கும் நடந்த சம்பாஷணையை விபரமாய்க் கூறினாள். இதைக் கேட்டதும் மரகதவல்லிக்கு உண்டான ஆச்சர்யத்திற்கும் சந்தோஷத்திற்கும் அளவில்லை. பிறகு, கொஞ்சநேரம் சிந்தனையிலாழ்ந்தவளாய் மௌனமாயிருந்தாள். அச்சமயம், அவளுடைய முகத்தில் வெட்கமும் ஆவலும் நன்கு புலப்பட்டன. அதைக் கண்ட சுலோசனை,

“மரகதம்! இப்பொழுது உன் மனதிலிருப்பதென்னவென்பது எனக்குத் தெரியும்.” என்று சொல்லவே, மரகதவல்லி, திடுக்கிட்டு,

“எங்கே? சொல்; பார்ப்போம்.” என்றாள். சுலோசனை,

“நீ உன் காதலரைப் பார்க்க ஆசைப்படுகிறாய்.” என்று விடையளித்தாள். உடனே, மரகதவல்லி, நாணத்துடன், தாழ்ந்த குரலில்,

“அடி! நீ சொல்லுவது வாஸ்தவமே. ஆனால் அது எப்படி சாத்தியம்?” என்று வினவினாள்.

சுலோசனை:—ஏன்? அதிலென்ன கஷ்டம்?

மரகதம்:—அவர் நான் அழைத்தாலும் இவ்வீட்டிற்கு வரமாட்டார். ஏனென்றால், அவர் என் தந்தையிடம், அவருடைய உத்தரவின்றி, இங்கு வந்து என்னைப் பார்ப்பதில்லையென்று சத்தியம் செய்துகொடுத்திருக்கிறார்.

சுலோசனை:—இவ்வளவுதானே? நீ போய் அவரைப் பார்த்தாலோ?

மரகதம்:—என்னடி! நான் போய் அவரைப் பார்ப்பதா? ஏண்டி! இது வெளியாகுமானால் என்னவாகும்?

சுலோசனை:—என்னவாகும்? ஒன்றும் ஆகாது. இன்னும் இதைப் பிறர் அறிய வழியேது? உனக்குமட்டும் தைர்யமுண்டானால் சொல். அதற்கு வேண்டிய ஏற்பாடு நான் செய்கிறேன்.

மரகதம்:—அடியே! எனக்கு அவ்வளவு தைர்யமில்லை. அதுவுமன்றி நான் அவரைப் போய்ப் பார்ப்பதில் அவருக்கே இஷ்டமிருக்குமோ இருக்காதோ தெரியவில்லை. ஒருக்கால் அவர் வித்தியாசமாக நினைத்துக் கொள்ளக்கூடும்.

சுலோசனை:—அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம்.

* * * * *

நிற்க, முற்கூறிய சம்பாஷணை மரகதவல்லியின் வீட்டில் நடந்துகொண்டிருந்த அதே சமயம், நம் ராமானுஜம் தன் அறையில் படுக்கையில் மனோநிம்மதியின்றி புறண்டவண்ணமிருந்தான். அவனும் அச்சமயம் தன் மனதில் தன் காதலியைப்பற்றியே புலம்பிக்கொண்டிருந்தானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. இவ்விதம் சுமார் அரைமணிநேரம் கழிந்தது. அதன் முடிவில் அவன்,

“ஹா! மரகதம்! இவ்விதம் உன்னையும் என்னையும் பிரிக்க, இப் படுபாவி [illegible] நினைக்கவேயில்லை. என் க[illegible] காலமாய்

188783

உன்னைப் பார்க்காமல் நான் படும் கஷ்டத்தை நீ அறிவாயோ? அந்தோ! நான் உன் வீட்டிற்கு வந்து உன்னைப் பார்க்க முடியாவிட்டாலும் நீ வழக்கப்படி உன் தங்கையுடன் மாலைவேளைகளில் அத்தோட்டத்திற்கு உலாவும்பொருட்டு வருவாயென்று நம்பி, நான் தினந்தோறும் அங்கு சென்று பார்த்தும், உன்னைக் காணமுடியவில்லையே. ஒருக்கால் அச் சண்டாளன் (கோவிந்தசாமி) நீ வெளியில் செல்லக்கூடாதென்று கட்டுப்பாடு செய்துவிட்டானோ? இருக்கட்டும்; அவனை லேசில் விடமாட்டேன். ஆனால்—" என்று அவன் மேலே சிந்திக்குமுன், பக்கத்தறையில் யாரோ மெல்ல நடமாடும் சப்தம் அவன் செவிகளில் விழவே, வியப்புற்று எழுந்து உட்கார்ந்துகொண்டான். அவ்வேளையில், வக்கீல் புருஷோத்தம செட்டியார் வீட்டில் அவருடைய பெண் சுலோசனாவைத் தவிர வேறு யாருமிருக்கமுடியாதென்பதும், அப்பெண்மணி அவ்விதம் மாடிக்கு வந்து சப்தமின்றி நடக்கமாட்டாளென்றும் அவனுக்குத் தெரியுமாதலால், அது அவனுக்கு மிகவும் ஆச்சர்யமாயிருந்தது. ஆனால் மறுநிமிஷம் அவ்விரு அறைகளுக்கும் இடையிலிருந்த கதவு மெல்லத் தட்டப்படவே, அவன் திகைப்புற்று என்ன செய்வதென்று புரியாமல் தயங்கியவண்ணம் கொஞ்சநேரமிருந்தான். அதன் முடிவில், தாழ்ந்த குரலில்,

"நான்தான் மரகதவல்லி." என்ற சப்தம் கேட்கவே, அவனுடைய ஹிருதயம் துள்ளிக்குதித்ததுபோலிருந்தது. அவன், உடனே தாவியெழுந்து, தன் செவிகளையே நம்ப இஷ்டப்படாதவன்போல், பிரமையுடன் அக்கதவையுற்று நோக்கியவண்ணமிருந்தான். அதற்குள் மறுபடியும்,

"பயப்படவேண்டாம். நம்மைக் கவனிக்கக் கூடியவர்கள் ஒருவருமில்லை. உடனே தயவுசெய்து கதவைத் திறவுங்கள்." என்று மரகதவல்லி மறுபடியும் கெஞ்சவே, ராமானுஜம், தன்னைத்தானே மறந்தவனாய், அக்கதவின் தன்னறைப்பக் [illegible] தாழ்ப்பாளை நீக்[illegible] கதவைத் [illegible] ன் தழுவி[illegible],

அவனை அணைந்துகொள்ளும்தருவாயில், அவள் அப்படிச் செய்யாவண்ணம் அவளைத் தடுத்து, ராமானுஜம்,

"மரகதம்! நீ என்னைத் தொடுவது பிசகு." என்றான்.

இதைக் கேட்டதும், அப்பெண்மணி தலைமேல் அடிவிழுந்தவள்போல் காணப்பட்டாள்.

"ஹே தெய்வமே! இவ்விதம் என் காதலரும் என்னை வெறுத்து, நான் தன்னைத் தொடவும் இஷ்டப்படமாட்டாரென்று நான் எதிர்பார்க்கவில்லையே." என்று மனமுடைந்து தேம்பித்தேம்பி யழலானாள். அதைக்கண்ட ராமானுஜத்தின் கண்களிலும் நீர் ததும்பியது.

ராமா:—மரகதம்! நீ என்னைத் தொட நான் சம்மதிக்காததற்குக் காரணம் நான் உன்னை வெறுக்கிறேனென்பதாவது, அல்லது எனக்கு உன்மீதுள்ள பிரியம் சிறிதும் குறைந்துவிட்டதென்பதாவது அல்லவேயல்ல. நீ சில நாட்களுக்குமுன் எனக்கு எழுதிய கடிதத்தையும் இன்னும் இன்று காலமே எனக்கு வந்த உன் விவாஹப் பத்திரிகையையும் உத்தேசிக்க, நாமிருவரும், இப்படித் தனிமையில் சந்தித்துப் பேசுவது மிகவும் அபாயத்திற்கிடம். அதிருக்கட்டும். நீ எப்படி இங்கு வந்தாய்? வக்கீல் புருஷோத்தம செட்டியார் வீட்டில்—

மரகதம்:—அவருடைய பெண் சுலோசனாவைத் தவிர வேறு ஒருவருமில்லை. அவளுடைய சகாயத்தைக் கொண்டே நான் இங்கு வந்தேன். அவள் என்னுடைய தோழி. அவளைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். சரி; ஆனால், நான் அன்று உங்களுக்கு எழுதிய கடிதத்தை நான் இஷ்டப்பட்டு எழுதியதாக நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறீர்களோ?

ராமா:—இல்லை! நீ பலவந்தத்தினால் எழுதியிருக்கவேண்டுமென்பது எனக்கு நன்றாய்த் தெரியும். இன்னும் உன்னை அவ்விதம் பலவந்தம் செய்தவன் அப்

பாபி கோவிந்தசாமியே யென்பதும் எனக்குத் தெரியும். ஆனால் அதைச் செய்யும்படி உன்னை பலவந்தம் செய்தவன் தன்னை விவாஹம் செய்துகொள்ளும்படியும் பலவந்தம் செய்யலாமல்லவா?

மரகதம்:—ஆஹா! நீங்கள் இவ்வளவு தூரம் படித்தும், இவ்விதம் பேசுவது வியக்கத்தக்கதே. நான் உங்களுக்கு அக்கடிதம் எழுதியதிலிருந்தும், இன்று உங்களுக்குக் கிட்டிய என் விவாஹப் பத்திரிகையிலிருந்தும், நான் அச் சண்டாளனை விவாஹம் செய்துகொள்ள சம்மதித்துவிட்டேனென்று நீங்கள் நினைத்துவிட்டீர்கள்போலும். நான் இவ்விதம் ஒரு உத்தம புருஷரைக் காதலித்துவிட்டு, பிறகு மற்றொருவனை விவாஹம் செய்துகொள்ள சம்மதிக்க அவ்வளவு சண்டாளியல்ல வென்பதை தயவுசெய்து தெரிந்துகொள்ளவும். நான் அப்பாபியை விவாஹம் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்லாமல், இவ்விதம் விவாஹ ஏற்பாடுகள் நடக்கட்டுமென்று மௌனமாயிருந்ததற்குக் காரணம், எப்படியும் தெய்வம் என்னைக் காப்பாற்றுமென்று பூர்ணமாய் நம்புகிறேன். அப்படியே திங்கட்கிழமை காலை 7 மணிக்குள் நான் காப்பாற்றப் படாமல், அவனையே விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று ஏற்படுமாகில், உடனே தற்கொலை செய்துகொள்ளுவேனேயொழிய, அவனிடம் என் கழுத்தை நீட்டமாட்டேனென்பது என்னைப் படைத்த ஈசனுக்குத்தான் தெரியும். இன்னும் நான், உயிருடன் இருக்கும் வரையில், உங்களைத் தவிர மற்றொரு புருஷனை என் கனவிலும் நினைக்கமாட்டேனென்பதை நீங்கள் பூர்ணமாய் நம்பலாம்.

இந்த உறுதிமொழிகளைக் கேட்டதும், ராமானுஜம் கொஞ்சநேரம் அசைவின்றி மரம்போல் நின்றான். பிறகு அப்படியே பாய்ந்து தன் காதலியை அணைந்துகொண்டு,

“கண்மணி! உன்னை தெய்வம் காப்பாற்றுவாரென்பது நிச்சயம். சரி; அதிருக்கட்டும். நான் முத்தையா

செட்டியாரைக் கொன்றவனைக் கண்டுபிடிக்கும்பக்ஷத்தில் உன்னை விவாஹம் செய்துகொள்ள முடியுமென்று எனக்கு வந்த அநாமதேயக் கடிதத்தையும் நீ தான் எழுதினாயோ?” என்று வினவ, அப் பெண்பாவை, வியப்புற்று,

“என்ன அநாமதேயக் கடிதமா? நான் ஒன்றும் எழுதவில்லையே.” என்று விடையளித்தாள்.

ராமா:—சரி; அப்படியானால் நம்மிருவருடைய சந்தோஷத்தையும் கோருகிற நண்பர் ஒருவர் நமக்கிருக்கிறாரென்பது நிச்சயம். ஆனால் அது யாரென்பது தற்சமயம் தெரியவில்லை. அதிருக்கட்டும்; உன் தந்தை இப்பாபியிடம் எப்படி மாட்டிக்கொண்டார்? (இதைக் கேட்டதும் மரகதவல்லி உடனே விடையளிக்கவில்லை. அவள் தயங்குவதைக்கண்டு) மரகதம்! அதை நான் அறிய விரும்புவதற்குக் காரணம். அதைக்கொண்டு சீக்கிரம் உன்னையும் உன் தந்தையையும் இப் பாபியிடமிருந்து மீட்கக்கூடுமென்ற நம்பிக்கையே யொழிய, அதையறிந்து உன்னையாவது உன் தந்தையையாவது கஷ்டத்திற்கும் அவமானத்திற்கும் உள்ளாக்கவேண்டுமென்ற கெட்ட எண்ணமல்ல வென்பது உனக்கே தெரியும். நீ என்னை நம்பி அதைச் சொல்லுவாயாகில் நாங்கள் கைக்கொண்டிருக்கும் கார்யத்தில் சீக்கிரம் ஜெயம் பெறலாம்.

மரகதம்:—சொல்லுகிறேன் கேளுங்கள். ஆனால் என் தந்தையைப்பற்றி பிறர் அறியக்கூடாத இரஹஸ்யம் ஒன்று உண்டென்பது மட்டும் எனக்குத் தெரியுமே யொழிய அது என்னவென்பது எனக்குத் தெரியாது. நிற்க, இந்த இரஹஸ்யத்தை எப்படியோ தற்சமயம் கொலை செய்யப்பட்டிருக்கும் நகை வியாபாரி முத்தையா செட்டியார் தெரிந்துகொண்டுவிட்டார். அவர், கொலை நடந்ததினம் காலை எங்கள் வீட்டிற்கு வந்து, என் தந்தையுடன் இதைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். அதில் அவர் தான் அந்த இரஹஸ்யத்தை

தன் மனதிலேயே வைத்துக்கொள்ளவேண்டுமானால், என் தந்தை அதற்காக தனக்கு அன்று இராவிற்குள் 5000 ரூபாய் தரவேண்டுமென்றும், தவறினால் உடனே அதை எல்லோருக்கும் தெரிவித்து, இவ்வூரில் என் தந்தையை அவமானப்படுத்துவேனென்றும் பயமுறுத்தினார். என் தந்தை வேறு வழியின்றி அதற்கு ஒப்புக்கொண்டார். நிற்க, அவ்விருவருக்கும் நடந்த சம்பாஷணை முழுமையையும், இப்பாபி கோவிந்தசாமி மறைவிலிருந்து ஒட்டுக்கேட்டுவிட்டான். ஆகவே, அந்த இரஹஸ்யம் அவனுக்கும் தெரிந்துவிட்டது. அன்று பாங்கி மூடப்பட்டிருந்ததாலும் என் தந்தையிடம் ரொக்கம் அவ்வளவு பெருந்தொகை இல்லாததாலும், அவர், அன்று இரவு 11 மணி வரையில் அலைந்து, 5000 ரூபாய் பணத்தையும் சேகரித்துக்கொண்டு, சுமார் 11¼ மணிக்கு முத்தையா செட்டியாருடைய வீட்டிற்குச் சென்றார். அவர் பன்முறை செட்டியாருடைய பெயரைச் சொல்லி அழைத்தும் பதிலில்லாததாலும், ஆனால் முன் கூடத்தில் விளக்கொன்று எரிந்துகொண்டிருந்ததாலும், திண்ணைமீதேறி ஒரு ஜன்னலின் வழியாய் உள்ளே எட்டிப்பார்க்க, முத்தையா செட்டியார் ஏற்கனவே தரையில் கொலை செய்யப்பட்டுக்கிடந்தாராம். அதைக் கண்டதும் அவர் நடுங்கி மேலே என்ன செய்வதென்று புரியாமல் திகைப்புற்று கொஞ்சநேரம் தவித்தார். அதைத் தான் உடனே போலீஸாருக்குத் தெரிவித்தால், தன் இரஹஸ்யம் முத்தையா செட்டியாருக்குத் தெரியுமென்பது வெளியாகும்பக்ஷத்தில், அது தனக்கே ஆபத்தாய் முடியுமென்று பயந்து வந்துவிட்டார். ஆனால் அவர் அவ்வீட்டைவிட்டு இறங்கும்பொழுது, இந்த அயோக்கிய சிகாமணி கோவிந்தசாமி அவரைப் பார்த்துவிட்டான். எனவே, மறுநாள் செட்டியாரின் கொலை வெளியானதும், அவன் என் தந்தையிடம் வந்து, அவரே அக்கொலையைச் செய்திருக்கவேண்டு

மென்று மிரட்டவே, அவனிடம் மாட்டிக்கொண்டார். பிறகு கோவிந்தசாமி, என்னைத் தனக்கு கூடிய சீக்கிரம் விவாஹம் செய்துகொடுக்காவிட்டால், தான் உடனே சென்று தனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் போலீஸாருக்குத்தெரிவிப்பதாக பயமுறுத்தவே, என் தந்தை சம்மதிக்கவேண்டியதாய்விட்டது. இவ்வளவே விஷயம்.

ராமா:—சரி; இருக்கட்டும். இந்த கோவிந்தசாமியின் வாலை ஒட்ட அறுத்துவிடுகிறேன். தற்சமயம் உன் தந்தை பெரும் ஆபத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறாரென்பது வாஸ்தவம். ஆனால் அன்று கோவிந்தஸாமியும் அவ்வீட்டிற்குச் சென்றானென்பது நிச்சயம். ஆகவே அது வெளியாகுமானால் அவனுக்கும் ஆபத்தே. நாங்கள் அதைக் கண்டுபிடித்துவிட்டோமென்பது அவனுக்குத் தெரியாது. அதுவுமன்றி, அம்மேலை செட்டியாருடைய வீட்டிலிருந்து சில பத்திரங்களைக் களவாடி, என்னையும் ஆபத்திற்குள்ளாக்க அவைகளைத் தன் தோழனுடைய தம்பியின் சகாயத்தைக்கொண்டு என் அறையில் ஒளித்துவைத்திருக்கிறான். நீ இதைப்பற்றி உன் தந்தையைத் தவிர வேறு ஒருவரிடமும் சொல்லவேண்டாம். உன் கல்யாண ஏற்பாடுகள் நடக்கட்டும்.

மரகதம்:—சரி; நாழியாய்விட்டது. நான் போகிறேன்.

ராமா:—போய்விட்டு வா! நீ மிகவும் உஜாராயிருக்கவேண்டும். நாம் செய்யும் காரியங்களை கோவிந்தசாமி அறியக்கூடாது. வேண்டுமானால் நீ வாஸ்தவத்தில் அவனைக் காதலிப்பதுபோல் பாசாங்கு செய். ஆனால் பாதகமில்லை.—(என்று கூறிக்கொண்டிருக்கையில், வாசலில் யாரோ, "ராமானுஜ முதலியார்! ராமானுஜ முதலியார்!" என்று அழைக்கும் சப்தம் கேட்கவே, தன் காதலியை அனுப்பிவிட்டு கீழே சென்றான்.)

அங்கு நின்றுகொண்டிருந்த தபாற்காரன் ஒருவன், "ஐயா! உங்களுக்கு ஒரு தந்தி." என்று கூறியவண்ணம்

ஒரு தந்தியைக் கொடுக்கவே, ராமானுஜம் பதறிய மனதுடன், அதை உடைத்து, கீழ்கண்டவாறு வாசித்தான்.—

“ஜானகி (ராமானுஜத்தின் தங்கை) சாகுந்தறுவாயிலிருக்கிறாள். நீயும் உடனே வரவும். நடேச முதலியார்.”

அத்தியாயம் 8.

தன் தங்கை சாகுந்தறுவாயிலிருக்கிறாளென்ற தந்தியை வாசித்ததும், ராமானுஜம் அடைந்த கவலையும் கலவரமும் வர்ணிக்க முடியாது. உடனே சென்று அவளைப் பார்க்கவேண்டுமென்ற அவாவை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆனால் தான் திங்கட்கிழமைக்குள் கிரிபுரம் திரும்பிவர முடியாமற்போய்விட்டால், தன் காதலி மரகதவல்லியின் கதி என்னவாகுமோவென்ற எண்ணம் அவனை மற்றொருபக்கம் அல்லற்படுத்தியது. எல்லாவற்றிற்கும், தன் நண்பனுடைய யோசனையைக் கேட்குமெண்ணத்துடன் உடனே பாலகிருஷ்ணனுடைய வீட்டிற்குச் சென்றான். அச்சமயம் பிற்பகல் சுமார் 4 மணி இருக்கும்.

பாலகிருஷ்ணன், நடந்த எல்லாவற்றையு மறிந்ததும்,

“நீ உடனே சென்று உன் தங்கையைப் பார்க்கவேண்டியது மிகவும் அவசியம். ஒரு மனைவி இல்லாவிட்டால் மற்றொரு மனைவி கிடைப்பாள். ஆனால் தங்கை கிடைக்க மாட்டாள். அதுவுமன்றி, நீ மரகதவல்லியைப்பற்றி கவலைப்படவேண்டியது அனாவசியம். உன்பொருட்டு அவளைக் காப்பாற்றவேண்டியது என்னுடைய கடமை. நீ இல்லாத சமயத்தில் அவளுக்கு எவ்வித ஆபத்தும் வராமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேன். இன்று வெள்ளிக்கிழமையல்லவா? நீ எப்படியும் திங்கட்கிழமைக்குள் திரும்பிவந்துவிடலாம். உன் தங்கையை தெய்வம் காப்பாற்றுமாக.” என்று தைரியம் சொல்லவே, ராமானுஜம் சற்று சமாதானமடைந்தான். அவன்,

“எப்படியும் நான் ஞாயிற்றுக்கிழமை இரவு வந்துவிடுவேன். சரி; நான் போகிறேன்.” என்று உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டான்.

ராமானுஜம் சென்றதும், பாலகிருஷ்ணன் 5 மணிவரையில் சிந்தனையுடன் உட்கார்ந்துகொண்டிருந்தான். பிறகு,

“இதெல்லாம் எப்படி முடியுமோ தெரியவில்லையே? சரி; போய் வக்கீல் புருஷோத்தம செட்டியாருடைய குமாஸ்தாவைப் பார்ப்போம்.” என்று தீர்மானித்து, உடுத்திக்கொண்டு வெளியே சென்றான்.

கடைசியில் அவன் புருஷோத்தம செட்டியாருடைய வீட்டிற்கு வந்தபொழுது, அவருடைய குமாஸ்தா முத்துராமன் (கிட்டுவின் தம்பி) திண்ணையிலுட்கார்ந்துகொண்டு மிகவும் ஊக்கத்துடன் எழுதிக்கொண்டிருந்தான். அவன், பாலகிருஷ்ணனைப் பார்த்ததும், அவனை ஒருதரம் உற்றுநோக்கிவிட்டு, மறுபடியும் எழுதவாரம்பித்தான். ஆனால் பாலகிருஷ்ணன், அவனையணுகி, மரியாதையுடன்,

“ஐயரே! எனக்கு உம்முடன் கொஞ்சம் பேசவேண்டும்.” என்று கூறவே, முத்துராமன், மறுபடியும் தன் தலையைத் தூக்கி, பாலகிருஷ்ணனை ஏற இறங்கக் கவனித்தான். பிறகு எழுந்து, வாயிலிருந்த தாம்பூலத்தைத் துப்பிவிட்டு, அலக்ஷியமாய்,

“ஏன்? என்னவேண்டும்?” என்று வினவினான்.

முத்துராமனுடைய முகத்திலிருந்தே அவன் லேசானவனல்லவென்பதை பாலகிருஷ்ணன் அறிந்துகொண்டானகையால், தான் அவனுடன் மிகவும் தந்திரமாய்ப் பேசவேண்டுமென்று தீர்மானித்தான். ஆகவே, தயக்கமின்றி,

“ஒன்றுமில்லை. எங்களுக்கு இவ்வூரில் மளிகை வியாபாரம் உண்டென்பது உமக்குத் தெரிந்திருக்கும். எங்களுக்கு பணம் கொடுக்கவேண்டியவர் பலருண்டு. அதில்

ஒருவர் சென்ற ஒருவாரகாலமாய்க் கண்டபடி சாக்குச் சொல்லி ஏமாற்றிவருகிறார். நாங்கள் அவர்மீது நடவடிக்கை நடத்தத் தீர்மானித்திருக்கிறோம்." என்றான்.

பிறகு அவ்விருவருக்கும் நடந்த சம்பாஷணையை இங்கு விரித்து எழுதவேண்டியது அனாவசியம். கடைசியில், முத்துராமன், தான் வக்கீல் குமாஸ்தா என்ற காரணத்தால், பாலகிருஷ்ணன் தன் உதவியை எதிர்பார்க்கிறானென்று நம்பிவிட்டான். பிறகு பாலகிருஷ்ணன் அவனை பக்கத்திலிருந்த ஒரு ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று, திருப்தியையும் நம்பிக்கையையும் உண்டுபண்ணி, பிறகு மெல்ல தன் வீட்டிற்கு அழைத்துப் போய்விட்டான். தன் அறைக்குச் சென்றதும், அவனை மரியாதையுடன் உட்காரும்படி உபசரித்துவிட்டு, தானும் அவனின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். முத்துராமனுக்கு முதலில் உண்டான சந்தேகம் இதற்குள் அடியுடன் பறந்துவிட்டது. அவன், தன் இடுப்பிலிருந்து பொடி டப்பியை எடுத்து ஒரு சிமிட்டாவை அட்டஹாசத்துடன் தன் நாசித் துவாரங்களில் செலுத்திவிட்டு,

"சரி; இனி விஷயத்தை விபரமாய்ச் சொல்லும்." என்றான்.

நிற்க, இதற்குள் பாலகிருஷ்ணனுடைய முகம் வியக்கத்தக்கவிதம் மாறிவிட்டது. அதில் அதுவரையில் காணப்பட்ட புன்சிரிப்பும் மரியாதையும் மறைந்து ஒருவித தீர்மானமும் கண்டிப்பும் தென்பட்டன. ஆனால் இன்னும் அவனுக்கு அவ்விதம் அப்பத்திரங்களை ராமானுஜத்தின் அறையில் ஒளித்துவைத்தது முத்துராமனென்பது நிச்சயமாய்த் தெரியாது. இருந்தபோதிலும், அவனைத் தவிர வேறு யாரும் அதைச் செய்திருக்க முடியாதென்பது அவனுடைய அபிப்பிராயமாகையால், தன்னால் முடிந்தவரையில் அவனைப் பயமுறுத்திப் பார்ப்பதென்று தீர்மானித்தான். அவனுடைய முகத்தில் திடீரென்று காணப்பட்ட வித்தியாசங்களைக் கண்டதும், முத்துராமன் திடுக்

கிட்டான். அவன் தான் ஏமாறி மாட்டிக்கொண்டுவிட்டோமென்று பயந்தவன்போல் காணப்படவே, பாலகிருஷ்ணன், அமைதியுடன்,

"ஐயரே! பிராமணனாய்ப் பிறந்து நீர் இப்பேர்ப்பட்ட காரியம் செய்தது ரொம்ப பிசகு." என்றான்.

"டேய்! என்னடா பேத்துகிறாய்? நான் என்ன செய்துவிட்டேன்?" என்று முத்துராமன் கண்களில் தீப்பறக்க சீறிவிழுந்தான்.

பால:—ஓய்! வீணாய் 'டேய்! கீய்!' என்று அவமரியாதையாய்ப் பேசவேண்டாம். சரி; அதிருக்கட்டும். என் நண்பனுடைய அறையில் அப்பத்திரங்களை எதற்காக ஒளித்துவைத்தீர்?

இதைக் கேட்டதும் முத்துராமனுடைய முகம் வெளுத்தது. கொஞ்சநேரம் பேச சக்தியற்று இஞ்சி தின்ன குரங்குபோல் விழித்தான். பிறகு சொல்லொணா தடுமாற்றத்துடன்,

"பத்திரமா?—நானா?—ஒளித்தேனா?" என்று உளறினான்.

அவனுடைய குழப்பத்தைக் கண்ட பாலகிருஷ்ணன் அவனே குற்றவாளியென்று தீர்மானித்தான். ஆகவே, மேலும் கண்டிப்பான குரலில்,

"ஐயரே! நீர் மறுகுவதில் பிரயோஜனமில்லை. நீர் திருட்டுத்தனமாய் என் நண்பனுடைய அறைக்குள் நுழைந்ததையும், பிறகு வெளியே வந்ததையும் கண்ணால் பார்த்த சாக்ஷிகளிருக்கிறார்கள். பாவம்! பிராமணனாயிற்றேயென்று பார்க்கிறேன் நீர் உடனே உள்ளதை ஒப்புக்கொள்ளாவிட்டால், இதோ போலீஸ் இன்ஸ்பெக்டர் சபேசய்யருக்குச் சொல்லியனுப்புவேன்." என்று பயமுறுத்தினான்.

'போலீஸ்' என்ற வார்த்தையைக் கேட்டதும், முத்துராமனுடைய சரீரம் நடுங்கவாரம்பித்தது. அவன், கெஞ்சிய குரலில்,

"நான் உள்ளதைச் சொல்லிவிட்டால், நீர் என்னை மன்னிப்பீரென்பது என்ன நிச்சயம்?" என்று வினவினான்.

பால:—அதைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம். சரி: நான் கேட்கும் கேள்விகளுக்கு உடனே விடையளியும். அப் பத்திரங்களை உம்மிடம் யார் கொடுத்தது?

முத்து:—என் தமயன் கிட்டு.

பால:—அவரிடம் அவைகள் எப்படி வந்தன?

முத்து:—மைனர் கோவிந்தசாமி முதலியார் கொடுத்தார்.

பால:—சரி; கிட்டுவய்யர் உம்மிடம் அவைகளை எப்பொழுது கொடுத்தார்?

முத்து:—முத்தையா செட்டியார் கொலை செய்யப்பட்ட மறுதினம்.

பால:—அவர் உம்மிடம் என்ன சொன்னார்?

முத்து:—அன்று பிற்பகல் சுமார் 3 மணிக்கு என் தமயன், அப் பத்திரங்களையும் ராமானுஜ முதலியாருடைய அறையின் பூட்டுக்கு ஒரு மறுசாவியையும் என்னிடம் கொடுத்து, பத்திரங்களை எப்படியாவது அவ்வறைக்குள் ஒளித்துவைக்கும்படி கூறினான், நான் முதலில் மாட்டேனென்று மறுத்துவிட்டேன். ஆனால் அவன் பலவந்தம் செய்யவே ஒப்புக்கொண்டேன். அன்று மாலை 5 மணிக்கு ராமானுஜ முதலியார் வெளியே போய்விட்டார். பிறகு, நீங்களும் அவரும் 7½ மணிக்குத் திரும்பி வந்தீர்கள். ஆகவே, இதற்கிடையில், கொஞ்சம் இருட்டியதும், நான் அவைகளை அவ்வறைக்குள் ஒளித்துவைத்தேன். ஆனால் நான் அப்படிச் செய்த ஒருமணி நேரத்திற்குள் நீங்கள் தற்செயலாய் அவைகளைக் கண்டுபிடித்துவிட்டீர்கள். அதையும் நான் பக்கத்தறையிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தேன். உடனே அதை நான் என் தமயனுக்குச் சொல்லிவிட்டேன்.

இதைக் கேட்டதும், பாலகிருஷ்ணன், "ஓஹோ! பிறகு போலீஸார் அவ்வீட்டை சோதனைசெய்ய வராததற்குக் காரணம் இதுவே." என்று நினைத்தான். அச்சமயமிருந்த முத்துராமனுடைய பயத்தையும் குழப்பத்தையும் கண்டு, பாலகிருஷ்ணனுடைய மனம் இளகியது. ஆகவே, அவன்,

"ஐயரே! நீர் உம்முடைய தமயனைப்போல் அவ்வளவு அயோக்கியனாய்க் காணப்படவில்லை. நீர் இப்படிச் செய்யலாமா?" என்று வினவினான். முத்துராமன்,

"செட்டியார்வாள்! நான் செய்தது பிசகு என்பதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் என்னுடைய நிலைமையை நீங்கள் அறிந்தால் என்மீது கண்டிப்பாய் இரக்கங்கொள்வீர்கள். என் தமயன் அவ்விதம் பலவந்தம் செய்யாவிட்டால், நான் இக் காரியத்தைச் செய்தேயிருக்கமாட்டேன். எனக்கு இப்பொழுது அவனைத் தவிர வேறு யாரும் ஆதரவில்லை. அவன் செய்துவரும் அக்கிரமங்கள் முழுமையும் எனக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் நான் வாயைத் திறந்தால், உடனே என்னை வீட்டைவிட்டு அடித்துத் துரத்திவிடுவான். எனக்கு இப்பொழுது வக்கீல் புருஷோத்தம செட்டியாரிடம் சம்பளம் கிடையாது. ஆகவே, நான் அவனை எதிர்த்துக்கொண்டால் என் கதி அதோகதியாய்ப் போய்விடும். நீங்கள் தயவுசெய்து என்னைக் காப்பாற்றவேண்டும். என்னை மன்னிப்பதுமன்றி, இதை நான் உங்களிடம் சொன்னேன் என்பதை நீங்கள் என் தமயனிடம் சொல்லக்கூடாது." என்று கல்லும் கரையும் விதம் கெஞ்சினான். பாலகிருஷ்ணன்,

"ஐயரே! நீர் பயப்படவேண்டாம். நான் உம்மை மன்னிக்கத் தயார். அப்படியே இது வெளிவந்து கிட்டு அய்யர் உம்மை வீட்டிலிருந்து துரத்திவிட்டாலும் பாதகமில்லை. நான் உம்மைக் காப்பாற்றுகிறேன். உமக்கு மாதம் 30 ரூபாய் சம்பளம் கொடுத்து என் கடையில் குமாஸ்தாவாக வைத்துக்கொள்ளுகிறேன்." என்று கூறவே, முத்

துராமனுக்கு உண்டான சந்தோஷத்தை நாம் வர்ணிக்கவும் வேண்டுமோ? அவன், ஆவலுடன்,

"செட்டியார்வாள்! உங்களைப்போன்ற தயாளகுணமுள்ளவர்கள் இக் கலியுகத்தில் அகப்படமாட்டார்கள். நீங்கள்மட்டும் உங்களுடைய கடையில் என்னை குமாஸ்தாவாக வைத்துக்கொள்வதாயிருந்தால், இதோ உம்முடன் வந்து இதை ஒருநொடியில் ரூபிக்கத் தயார். இனிமேல் நான் உங்களுடைய தாஸன்." என்று பாலகிருஷ்ணனுடைய வலது காதில் அடித்துக்கொடுத்தான். பாலகிருஷ்ணன்,

"நான் உம்மைக் காப்பாற்றுவேனென்பது சத்தியம். ஆனாலும் அனாவசியமாய் தமயனையும் தம்பியையும் பிரிக்கும் பாபத்தை நான் செய்யமாட்டேன். உம்முடைய உதவியில்லாமலே கிட்டுவய்யர் இதை ஒப்புக்கொள்ளுகிறாராவென்று பார்க்கிறேன். அவர் அப்படி மறுத்தால், நீர் வந்து ரூபிக்கவேண்டும்." என்று கூறவே, முத்துராமன்,

"செட்டியாரே! இங்கு நான் ஒருவிஷயம் சொல்லிக்கொள்ளவேண்டும். இதில் என் தமயன் சம்பந்தப்பட்டிருந்தபோதிலும், அவனும் மற்றொருவருடைய போதனையினாலேயே இக்கார்யத்தைச் செய்தானென்பது நிச்சயம். இன்னும் நீர் எங்களுடைய உதவியில்லாமலே மைனர் கோவிந்தசாமியை இன்று இரவு கையும் களவுமாய்ப் பிடிக்க வழியிருக்கிறது." என்றான்.

இதைக் கேட்டதும், பாலகிருஷ்ணன், ஆச்சர்யப்பட்டவனாய், ஆவலுடன்,

"என்ன வழி? உடனே சொல்லும்." என்று துரிதப்படுத்தினான்.

* * * * *

கிரிபுரத்தில் அவ்வூர் வக்கீல்மார்களும், இன்னும் இதர தனவந்தர்களும், மாலைவேளையில் டென்னிஸ் ஆட்டமாடவோ அல்லது தங்களிஷ்டப்படி சந்தோஷமாய்க்

காலங்கழிக்கவோ, ஆங்கிலேய பாஷையில் 'டவுன் ஹால்' என்று கூறப்படும் இடமொன்று உண்டு. அதில் அன்று மாலை சுமார் 7 மணிக்கு நடந்த ஒரு சம்பவத்தை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். ஏற்கனவே இருட்டிவிட்டதால் டென்னிஸ் ஆடும் மேடை காலியாயிருந்தது. ஆனால், அதில் போடப்பட்டிருந்த இரு சாய்வு நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டு இருவர் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். அதில் ஒருவர், அவ்வூர் கவர்ன்மெண்ட் வக்கீல் கணபதி அய்யர். மற்றொருவர் வக்கீல் பஞ்சாபகேச அய்யர். அவ்விருவரும் சகோதரர்கள்போல் தாராளமாய்ப் பழகுவார்கள். அவர்களுடைய முன்னிலையில் காணப்பட்ட ஒரு சிறு மேஜையின்மீது, அழகிய விளக்கொன்று எறிந்துகொண்டிருந்தது. இருவர்களுடைய கைகளிலும் வர்த்தமானப் பத்திரிகையொன்று இருந்தபோதிலும், அவர்கள் அதை வாசித்ததாகவாவது அல்லது வாசிக்கும் எண்ணம் உடையவர்களாகவாவது தோன்றவில்லை. இனி அவர்களுடைய சம்பாஷணையைக் கவனிப்போம்.

பஞ்சா:—ஏண்டா கணபதி! இன்று (ரங்கு) ஆட்டத்திற்கு வரப்போகிறாயோ இல்லையோ?

கணபதி:—இல்லை. இன்று இரவு கொஞ்சம் கார்யமிருக்கிறது.

பஞ்சா:—என்னடா இரவில் கார்யம்?

கணபதி:—அதையேன் கேட்கிறாய்? இன்று ஒரு விசித்திரமான கார்யம் நடக்கிறது. என்ன செய்வதென்று புரியவில்லை.

பஞ்சா:—என்ன விசேஷம்? சீக்கிரம் சொல்லித்தொலையேன்.

கணபதி:—இதோபார். (என்று சொல்லி, தன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை யெடுத்துத் தன் நண்பரிடம் கொடுத்தார்.)

அதில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது :—

"கணபதி அய்யர் அவர்களுக்கு,

நீர் இன்று இரவு 10 மணிக்கு, கையில் ரூபாய் 500 எடுத்து வந்து, என்னை இவ்வூருக்கு வெளியிலிருக்கும் சுப்பிரமண்யஸ்வாமி கோவிலின் தென் பிராகாரத்தில் சந்திப்பீராகில், நீர் 3 மாதங்களுக்குமுன் நகைவியாபாரி முத்தையா செட்டியாருக்கு 2500 ரூ.க்கு எழுதிக்கொடுத்த பிராமிஸரி நோட்டு கிடைக்கும். ஆனால், நீர் இதைப் போலீஸாருக்கு அறிவித்து, என்னைப் பிடிக்க ஏற்பாடு செய்தால் நான் அங்கு அகப்படமாட்டேன். ரூ. 500க்கும் 2500க்கும் எவ்வளவு வித்தியாசம் என்பதை நான் உமக்குச் சொல்லவேண்டியதில்லை."

இதை வாசித்ததும், வக்கீல் பஞ்சாபகேசய்யருக்கு உண்டான ஆச்சர்யத்திற் களவில்லை. அவர், தன் நண்பரைப் பார்த்து,

"ஏண்டா? இது மிகவும் ஆச்சர்யமாயிருக்கிறதே. ஆமாம்; நீயும் முத்தையா செட்டியிடம் மாட்டிக்கொண்டிருக்கிறுயென்பது எனக்குத் தெரியாதே?" என்றார்.

கணபதி :—சொன்னாலல்லவோ தெரியும்? இவ்வளவு சம்பாதிக்கும்பொழுது நான் செட்டியிடம் கடன் வாங்கினேனென்பது வெளியானால் என் கௌரவம் என்னவாகும்? ஆனால் அவனிடம் மாட்டிக்கொள்ளாதவர்கள் இவ்வூரில் ஒருவருமில்லை.

பஞ்சா :—வாஸ்தவம். ஆமாம்; உனக்கு அது தெரியுமோ?

கணபதி :—என்ன?

பஞ்சா :—அதான் வக்கீல் குப்புஸ்வாமி அய்யர் இருக்கிறாரே.

கணபதி :—ஆமாம்; அவருக்கும் ஏகக் கடனாமே?

பஞ்சா :—அதையேன் கேட்கிறாய்? அவர் போனமாதம் 2000 ரூ. மதிப்புள்ள தன் பெண்டாட்டியின் வைரத்தோட்டை முத்தையா செட்டியிடம் 200 ரூ.க்கு அடகு வைத்திருக்கிறார். இப்பொழுது தோடு போனவிடம் தெரியவில்லை. இதை வெளியிட்டால் பாக்கிக் கடன்காரர்கள் பிடித்துக்கொள்ளுவார்களென்று பயந்து, என்னமோ வசனம் சொல்லுவார்களே, அது போல் வாயை மூடிக்கொண்டு இருக்கிறார்.

கணபதி :—இது ஆச்சர்யமாயிருக்கிறதே. ஏண்டா? நான் நேற்று அவருடைய வீட்டிற்குப் போயிருந்தபொழுது அவருடைய சம்ஸாரத்தின் காதில் வைரத்தோடு இருந்ததே.

பஞ்சா :—போடா பைத்தியமே. அந்த இரஹஸ்யம் எனக்குத்தான் தெரியும். இப்பொழுது அந்தம்மாளுடைய காதிலிருப்பது இமிடேஷன் தோடு.

கணபதி :—அடபாபமே! சரி; அது போகட்டும். நான் இப்பொழுது என்ன செய்கிறது?

பஞ்சா :—செய்வதென்ன? கம்மென்று ரூபாய் 500றைக் கொண்டுபோய், இக்கடிதம் எழுதியிருப்பவனிடம் கொடுத்துவிட்டு, நோட்டை வாங்கிக் கிழித்துவிடு.

கணபதி :—ஏண்டா? நாமே வக்கீலாயிருந்து இப்படிச் செய்வது சரியா?

பஞ்சா :—போடா அசடே! லாவையும் சட்டத்தையும் நாம் நமக்காகவா வாசித்தோம்? நம் வயிற்றுப் பிழைப்பின்பொருட்டல்லவோ வாசித்தோம்?

கணபதி :—ஆமாம். நான் இன்று போய் அவனை சந்திக்காவிட்டால் அவன் அந்த நோட்டை வைத்துக்கொண்டு என்ன செய்வான்? அது அவனிடமிருந்தும் பிரயோஜனமில்லை. அது வெளியாகுமானால் அவனுக்குத்தானே அபாயம்?

பஞ்சா :—நீ ஒரு அசடு. ஏண்டா! அவன் தனக்கு அதிலிருந்து லாபமில்லை யென்பதை அறிந்தும், அந்த

நோட்டை கிழித்தெறிந்துவிடுவானென்று நினைக்கிறாயோ? பைத்தியமே! உடனே அதைத் தற்சமயம், முத்தையா செட்டியின் மகனுடைய கார்யங்களைக் கவனித்துவரும் கோபால செட்டிக்கு அனுப்பிவிடுவான். உடனே கோபால செட்டி உன்னைப் பிடித்துக் கொள்ளமாட்டானா?

கணபதி:—கோபால செட்டியா? அது யார்? எனக்குத் தெரியாதே.

பஞ்சா:—உனக்கேன் தெரியும்? சொல்லுகிறேன் கேள். முத்தையா செட்டி உயில் ஒன்றும் எழுதிவைக்கவில்லை. ஆகவே அவனுடைய சொத்து முழுமையும் அந்தப்பையன் வாசுதேவனுக்குத்தான் வரும். ஆனால் அவன் இப்பொழுது கைது செய்யப்பட்டிருப்பதால் அவனுடைய கார்யங்களையெல்லாம் அவன் மாமனாகிய இந்த கோபால செட்டியார் பார்த்துக்கொண்டு வருகிறார்.

கணபதி:—ஓஹோ! அப்படியா? சரி; ஆனால், நான் பணத்துடன் சென்று இக்கடிதமெழுதியவனைப் பார்க்கவேண்டும் என்று சொல்லுகிறாய்.

பஞ்சா:—ஆமாம்; இதில் நீ தயங்குவது எனக்கு ஆச்சர்யமாயிருக்கிறது.

கணபதி:—உனக்கென்ன? நீ சொல்லுகிறாய். எனக்கு என்னமோ பயமாயிருக்கிறது. ஏண்டா? நியாயப்படி நாம் இதை உடனே போலீஸாருக்குத் தெரிவிக்க வேண்டாமா? ஏனென்றால் எப்படியும் இக்கடிதம் எழுதியவனுக்கு முத்தையா செட்டியின் கொலையைப்பற்றி கண்டிப்பாய் தெரிந்திருக்கவேண்டும்.

பஞ்சா.—சரி; உன்னுடன் பேசுவது வீண் வாய்ச்சேதம். ஏண்டா? அவனும் உன்னைப்போல் சுத்த மண்டுவாயிருப்பானென்று நினைத்துக்கொண்டிருக்கிறாயோ? இதோ இந்த நிமிஷமும் அவன் உன்னை மறைவிலிருந்து கவனித்துக்கொண்டிருப்பான். நீ போலீஸாருடன் பேசுவதைக் கண்டால், உடனே கம்பி நீட்டிவிடுவான். உனக்கு அசட்டுப்பட்டந்தான் மிஞ்சும்.

கணபதி:—நீ சொல்லுவதும் வாஸ்தவந்தான். (என்று சொல்லிக்கொண்டே தன் கடிகாரத்தைப் பார்த்துவிட்டு) அடாடா! மணி 8க்குமேலாய்விட்டதே. சரி; நான் போகிறேன். (என்று தன் நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு, எழுந்து வெளியே சென்று, அங்கு தயாராய் நின்றுகொண்டிருந்த தன் மோட்டாரில் ஏறிக்கொண்டு, 10 நிமிஷ நேரத்தில் தன் வீடு வந்து சேர்ந்தார்.)

அவர் உள்ளே நுழைந்து தன் சட்டைகளைக் களைந்து கொண்டிருக்கையில், அவருடைய மனைவி கையில் ஒரு கடிதத்துடன் அவரிடம் வந்துசேர்ந்தாள். அந்தம்மாளுக்கு வயது 35க்குமேல் இருக்காது. அவளுடைய காதுகளில் வைரத்தோடு பலவித காந்திகளுடன் பளபளவென்று ஜ்வலித்துக்கொண்டிருந்தன. ஆனால் அவைகளும் இமிடேஷனென்பது தெய்வத்துக்குத்தான் தெரியும். நல்லவிலையுயர்ந்த பெங்களூர் பச்சைப் புடவையை மிகவும் தளுக்குடன் உடுத்திக்கொண்டிருந்தாள். இன்னும் அவளைக் கண்டதுமே, அவள் பூர்ண கர்ப்பமென்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். அவள், தன் இடுப்பை கரங்களால் பிடித்துக் கொண்டே, தன் பர்த்தாவை யணுகி,

"ஜவுளிக்கடை செட்டி பணத்துக்கு வந்தான்—" என்று அவள் மேலே பேசுமுன், நம் வக்கீல்,

"வேறென்ன குறைச்சல்? நீ மாதத்துக்கொரு புடவையைக் கட்டிக்கொண்டு கிழித்தால் அவன் ஏன் வரமாட்டான்? சரி; அதென்ன கடிதம்?" என்று சீறினார். அந்த அம்மாள்,

"இதோ வாசித்துப் பாருங்கள்; உங்களுடைய பெண் எழுதியிருக்கிறாள்." [illegible] வே, வக்கீல், வெறுப்புடன்,

"என்னடி எழுதியிருக்கிறாள்? சொல்லித் தொலையேன்," என்று கூறினார்.

மனைவி :—அவளும் 6 மாதகாலமாக ஸ்நானம் பண்ணவில்லையாம்.

வக்கீல் :—உனக்கும் உன் பெண்ணுக்கும் வேறென்ன வேலை? பன்றிமாதிரி வருஷத்துக்கொன்று பிதுக்கித் தள்ளுங்கள். தலையில் துணியைப் போட்டுக்கொண்டு எங்கேயாவது ஓடவேண்டியதுதான். ஏன்? இன்னும் சொல்லவேண்டியது ஏதேனும் உண்டோ?

மனைவி :—நீங்கள் இப்படி சீறி விழுந்தால் பேசுவதெப்படி?

வக்கீல் :—சரி; பாக்கியிருந்தால் சொல்லித்தொலையேன்.

மனைவி :—அந்தக்குட்டி மங்களத்தின் குழந்தைக்கு அடுத்த வாரம ஆண்டு நிறைவாம். அத—

வக்கீல் :—இருந்தால் நமக்கென்ன? பெத்தவன் பார்த்துக் கொள்ளுகிறான். சீச்சீ! இந்த இழவு வீட்டில் தெரண்டுகுளி, பிரஸவம், ஆண்டு நிறைவு இவைகளை விட்டால் வேறு பேச்சில்லை.

மனைவி :—ஆமாம்; வீடென்று இருந்தால் எல்லாந்தானிருக்கும். பணமென்றால் உங்களுக்கு இப்படித்தான் ஆவேசம் வந்துவிடுகிறது.

வக்கீல் :—எண்டி? நான் பணத்துக்குப் படும் கஷ்டம் தெரியாதுபோல் பேசுகிறாயே.

மனைவி :—அடாடா! இந்தச் சிலவுகளால் கஷ்டமொன்றும் வராது. நீங்கள் அந்தப் பழிகாரன் பஞ்சாபகேசய்யன் வீட்டிற்குப்போய் தினம் 50 ரூபாய் ரங்காட்டத்தில் தோற்பதை நிறுத்தாதவரையில் இந்தக் கஷ்டம் விடாது.

வக்கீல் :—சீச்சீ! நாயே! வாயை மூடு. போய் இலை போடச் [illegible] ப்பிட்டுவிட்டு [illegible]
மாய் [illegible]

"பால வித்யா"

1931ஆம் ஜூலைமீ பஞ்சாங்கம்.

தேதி	த.மீ	வார. திதி, நக்ஷத்திரம், தியாஜ்ஜியம், யோகம் முதலியன
1	கஎ	புத பிர உ-ச, உத்ரா சப-0, தி கரு-ரு0, அ.ஸி.
2	கஅ	வியா துவி ந-உஎ, உத்ரா க-ருச, தி கஉ-நர, ஸிர உப, ஸி.
3	கக	வெ தரு கூ-உ, திரு கூ-கூ, தி கஎ க, லைக சது, ம, ஸி.
4	உ0	சனி சது கூ-நகூ, அவி கக உந, தி நக க0, ஸி, அ.
5	உக	ஞாயி பஞ் கச ந, சத கஎ உக, தி க ரு-உ, ஸி.
6	உஉ	திங் ஷஷ்டி கஅ ருந, பூரட் உகூ-சக, ஸ ரு0 கரு, ஸி.
7	உந	செவ் ஸப் உந சஉ உத்ரட் ந0 ரு, தி 0-0, காலாஷ்டமி, அதிதி, அ. ஸி.
8	உச	புத அஷ் உஅ-க0, ரேவ நகூ ரு, தி ந-ரு, ம
9	உரு	வியா நவ நஉ-எ, அச சக-கஉ, தி ந0-நஎ, ஸி,ம.
10	உசு	வெ தெ க ரு-ச, பர சரு ருகூ, தி எ கசு, ஸி.
11	உஎ	சனி ஏகா நஎ சக, ※ சகூ-கக, திகஎ-நந, ஸர்வஏகா, ஸார்-
12	உஅ	ஞாயி துவா நஎ-உக, ரோ ருக க0, தி ந0-க0, அ,ஸி. [வப, அ
13	உகூ	திங் திர நகூ-உகூ, மிருக ருஉ, தி ரு-உ0, பிரதோஷம், அ,ஸி.
14	ந0	செவ் சது கச-உகூ, திரு நக-உக, தி கஉ-சக, கா போ அமா, ம,
15	நக	புத ● நக-உஉ, புனா சகூ-ருச, தி உ0-ச0, அமாவா, ஸி. [ஸி.
16	க	வியா பிர உஎ-கச, பூச சஎ-நக, திகூ-எ, கடகரவி உஅ உக, —
17	உ	வெ துவி உஉ-உகூ, ஆயி சச உஎ, க கஎ-ருந, ம [ஆ தி அ,ஸி,
18	ந	சனி திரு கஎ-உ, மக ச0-ரு0, தி கஉ-கஅ, தி ருகூ-ந0, [சது-விரு, அ, ஸி.
19	ச	ஞாயி சது சக-கந, பூர கக ருக, சே க-0, தி ருக-நக, ஸி,அ.
20	ரு	திங் பஞ் ரு-அ, ஷஷ் ருக-ருஉ, உத்ர நஉ-சரு, தி ருஉ-உ0,
21	சு	செவ் ஸப் ருந-0, ஹஸ் உஅ-சஉ, தி சஎ உஎ, ஸி [ஷஷ்உப, ஸி
22	எ	புத அஷ் சஎ-உஎ, சித் உச ருஎ, தி நஅ-கக, ஸி.
23	அ	வியா நவ சஉ-உச, ஸ்வா உந ச0, தி ந ரு உ, ஸிம்மாய ருகூ-ந,
24	கூ	வெ தெ நஅ-உ, விசா கஅ-ருஅ, தி உச-கக, ஸி. [அ,ஸி.
25	க0	சனி ஏகா நச நக, அனு கஎ-ரு, தி க0-ருந, ஸர்வஏகா, [கோபத்ம விரு, ஸி.
26	கக	ஞாயி துவா நஉ-எ, கேட் கக கஉ, திகந-கஅ, பிரதோ, ம, அ.
27	கஉ	திங் திர ந0-ருஉ, மூல கக-உக, தி கஉ-உஅ, தி சக-ரு, ஸி.
28	கந	செவ் சது ந0-ருக பூராட ருஅ தி நஅ ருக, பௌ விரு ஸி.
29	கச	புத ○ நஉ-அ, உத்ரா உ0 சந, தி கக-உந ஸ்யா-ஸிர உப, [ஸர்வயஜுருபாகர்ம வியாஸபூர்ணிமா, ஜமா, அ,ஸி.
30	கரு	வியா பிர உச-கஎ, திரு உச-ச0, தி கரு-உ0, ஸிர-உப,
31	கசு	வெ துவி உஅ-எ, அவி உக-உஅ, தி சக உக, ஸி

ராகு		சுக்	புத
	2 கட புத ,, மிது-சுக் 11 கடை குஜ 16 கட-ரவி 21 ஸி-புத 27 கட-சுக்		ரவி
			குஜ
சனி			கே

பிரஸவ காலத்தில் செய்யவேண்டிய முதல் உதவி.

நூலாசிரியர்—டாக்டர் யூ. ராம ராவ்.

நமது இந்தியதேசத்தில் தாய்களின் மரண விகிதமும் சிசுக்களின் மரண விகிதமும் தற்போது அதிகமாகவிருக்கிறது. ஒரு வயதுக்குட்பட்ட சிசுக்களில் 1000க்கு 260 பேர்கள் வருஷவாரி மாண்டுபோகிறார்கள். தாய்மார்கள் கர்ப்பிணிகளாக இருக்கும்போது ஆரோக்கிய விதிகளைக் கவனியாமல் தேகத்தை பலஹீனப்படுத்திக்கொள்வதும், பிரஸவகாலத்தில் டாக்டர், தேர்ச்சிபெற்ற மருத்துவ ஸ்திரீ இவர்கள் உதவி இல்லாமல் புராதன பழக்கத்தைக் கைப்பிடித்து ஒன்றும் தெரியாத மருத்துவகுல ஸ்திரீகளைக்கொண்டு மருத்துவம் செய்துகொள்வதும், சிசு பிறந்த பிறகு அதற்கு வேண்டிய போஷிப்பைச் சரிவர செய்யாமலிருப்பதுமே இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன. ஆனதுபற்றி இந்திய ஸ்திரீகளுக்கு பிரஸவத்தைக் குறித்து அற்ப ஞானமாகிலும் இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. முதல் உதவிபுரியப் போதுமான அறிவு இல்லாமையால் அநேக கெடுதிகள் சம்பவிக்கின்றன. பிரஸவ வேதனைப்படும்போது டாக்டர் அல்லது மருத்துவ ஸ்திரீ வரும்வரையில் இன்னது செய்யவேண்டுமென்பதை மட்டும் இச்சிறு நூல் கற்பிக்கிறது. இதில் பதினான்கு அத்தியாயங்கள் அடங்கியுள்ளன. கர்ப்பச் சின்னங்கள், கர்ப்பகாலத்தில் நேரிடும் விபத்துக்கள், சுகப்பிரசவம், கஷ்டப் பிரசவம், பிரசவத்தில் பரிசுத்தம், பிரசவகாலத்தில் நேரிடக்கூடிய சிக்கான வியாதிகள், குழந்தையின் பாதுகாப்பு, சிசுக்களின் போஷிப்பு இவை முதலியன யாவரும் அவசியம் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள். இப்புத்தகம் எளிய தமிழ் நடையில் பரிபாஷைக் கலப்பின்றி எழுதப்பட்டிருக்கிறது.

விலை அணா 6.

ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். வி. பி. யில் அனுப்பவேண்டுமானால் ஆறு காப்பிக்கு குறையாமல் ஆர்டர் செய்யவேண்டும். வேண்டுவோர் சென்னை தம்புசெட்டித்தெரு 323 நெ. ஸ்ரீ கிருஷ்ணன் பிரதர்ஸ் அவர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். விலாசம்:— ஆரோக்கிய தீபிகை மானேஜர், தபால் பெட்டி 16[illegible] சென்னை என்று எழுதவும்.

Printed and Published by N. Venkataraman,
at the Sri Vidya Press, Kumbakonam.